இருட்கிரகம்

ஒரு பொல்லாப்புமில்லை

15-02-08

50/-

காதலர் தினம்

துயரந் தோய்ந்த நாள்

குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டும் ஐரோப்பியப் பெண்கள்

என்பது ரூபாய் நோட்டு

ISSN 1800-3699

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கிறது

சேமமடு பொத்தகசாலை

ஏற்றுமதியாளர்-இறக்குமதியாளர்

சேமமடு



யு.ஜி.50 பீப்பிள்ஸ் பார்க், கேஸ்வர்க்ஸ் வீதி, கொழும்பு -11

தொலைபேசி : 011-2472362, 011-2321905

தொலைநகல் : 011-2448624

e-mail : chemamadu@yahoo.com

CHEMAMADU BOOK CENTER

U.G.50, PEOPLES PARK, COLOMBO 11

TEL : 011-2472362, 011-2321905 fax : 011-2448624

காதலர் தினம்

சந்திரவதனா

நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே

செ.யோகநாதன் நினைவாக

செங்கை ஆழியான்

நன்றி கானா பிரபா

பாதுகாப்பு

ஆழியாள்

ஒன்பது ரூபாய் நோட்டு

அனுஷா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறோம்

வணக்கம்
காதல்மிகு
வாசகர்களே!

உங்களில் பலர் காதலர் தினத்தை கொண்டாடியிருப்பீர்கள். கொண்டாடப் படவேண்டியதுதான். கொண்டாடிக் குதூகலித்தோர்க்கு முதலில் எம் வாழ்த்துக்கள். 'காதலரும் அவைக்கு ஒரு கொண்டாட்டமும்!' என்று கொதித்து போயிருக்கும் சில அடிப்படைவாதிகளின் கருத்துக்கள் சரிதானா என்று இங்கு யோசிக்க வேண்டியிருக்கிறது. காதலும் வீரமும் இல்லாமல் நாமோ அல்லது நமக்கொரு இலக்கியக் கருவூலமோ இல்லை என்பதெல்லாம் சரிதான் ஆனால் பெப்ரவரி 14 இல் நாம் கொண்டாடுவது நாம் புரிந்து கொண்ட காதல்தானா? காதல் என்ற வார்த்தையை நாம் பல சந்தர்ப்பங்களில் மிகத் தவறாக புரிந்து விட்டோமா என்ற ஐயப்பாட்டை இந்தக் 'காதலர் தினம்' உருவாக்கவில்லையா? இத்தினத்தில் நட்பையும் காதலையும்,காமத்தையும் குழப்புவது போலப் படவில்லையா? கண்ணனையும் ஏனைய கடவுளரையும் காதலனாக காதலியாக பாவனை செய்கையிலும், காதலாகி கசிந்து கண்ணீர் மல்கையிலும் நெக்குருகும் நெஞ்சு, இளசுகளின் காதலில் அப்படி நெக்குருகுவதில்லை. கிணற்றடிக் காதலை ஏற்காதவனைத் திட்டும் பாரதிதாசனில் பிழையிருப்பதாக தெரியாவிட்டாலும், சரியாய் இருப்பதாகவும் படவில்லை. எதற்கும் கையேந்தும் ஏழைப்பட்ட தேசங்களின் மக்கள் இலவசமாகக் கிடைக்கிறது என்பதற்காக கலாசாரங்களையும் கையேற்பது சத்தியமாய்ச் சரியாகப் படவில்லை. இதை பிழையாக பார்ப்போர் காதலால் எம்மை மன்னிப்பீர்களாக!

அன்புடன்



ஆசிரியர்

துளியே கடல்
என்கிறது
காமம்

கடலும் துளி
என்கிறது
நட்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் அரசியல்வாதிகள் எதில் சிக்கிப் போயிருக்கிறார்கள்?

ஜெயா, வெள்ளவத்தை

வரலாற்றில்!! கடந்த கால வரலாற்றின் கைதிகள் அவர்கள். இங்கு மட்டுமல்ல எங்கும் உள்ள பிரச்சினை இதுதான். 'நாம் மற்றவர்களைப் போல வரலாற்றில் சிக்கித் தவிக்கவில்லை என்று நினைத்துக் கொள்வது 20 ஆம் நூற்றாண்டின் வியாதி' என்று சொன்ன புரூஸ் ஸ்டெர்லிங்கின் பொய்யாமொழி நீள்கிறது.

★★★★

Confidence, Hope, Trust இந்த ஆங்கில வார்த்தைகளை தனித்தனியாக மொழி பெயர்த்தால் தமிழில் என்ன வார்த்தைகள்?

ரமணன், திருகோணமலை

'Gap இல புகுந்து கிடாய் வெட்டுதல்' என்றொரு புது மொழியை அண்மையில் நண்பர்கள் பயன்படுத்துகிறார்கள். எதிர்பாரா வேளையில் நெற்றிப் பொட்டில் அடிப்பது என்று இந்தப் புது மொழிக்கு பொழிப்புரை கொடுக்கலாம். அதைத்தான் இந்தக் கேள்வியில் நீங்கள் செய்திருக்கிறீர்கள். அகராதியைப் புரட்டினாலும் நீங்கள் சொன்ன நம்பிக்கைதான் தமிழ் வார்த்தையாய் போடப்பட்டுள்ளது. தனிவார்த்தை ஒவ்வொன்றுக்கும் கிடைக்கவில்லை ஆனாலும் விளக்கலாம். ஊரில் எல்லோரும் மழைக்காக வேண்டுதல் செய்தபோது குடையோடு வந்த சிறுவனிடம் இருப்பது **Confidence**. ஒரு வயதும் நிறையாத எனது மகளை காற்றில் தூக்கி எறிகிறபோது 'மீண்டும் அப்பா தவற விடாமல் தன்னைப் பிடிப்பார்' என்பதால் சிரிக்கிறாளே அது **Trust**. அடுத்த நாள் காலையில் உயிரோடு எழுவோமா என்பதே நிச்சயமில்லாதபோதும் நாளைய திட்டங்களோடு நாங்கள் தினமும் தூங்குவதை **Hope** குறிக்கிறது.

★★★★

எதிரொலி என்றால் என்ன?

ஜெனா, கம்பளை

ஒரு கன்னத்தில் அடித்தால் அடித்தவன் கன்னத்தில் அடிப்பது. சிவாஜியை வைத்து பாலச்சந்தர் 70 களில் எடுத்துத் தோல்வி கண்டு தொலைத்தது. கண்ணதாசன் பாசையில் வானொலி படைக்க மனிதனுக்கு உதவியது. வெளவால் வாழ்வில் அதன் கண்கள். இவை எல்லாவற்றையும் விட எங்கள் எல்லோரினதும் வாழ்வு. நீ எதைக் கொடுக்கிறாயோ எதை நினைக்கிறாயோ அதையேதான் இந்த உலகு உனக்கான வாழ்வாக்கித் தருகிறது. 'எந்த ஒரு தாக்கத்திற்கும் எதிரானதும் சமமானதுமான மறுதாக்கம் உண்டு' என்பது விஞ்ஞானமல்ல, வாழ்வுதான்.

★★★★

ஆம் அல்லது இல்லை என்று மட்டுமே பதில் சொல்லுங்கள் என்று யாராவது மெய்யனிடம் கேள்வி கேட்டிருக்கிறார்களா?

உசா, யாழ்ப்பாணம்

அப்படிக் கேட்டுத் தொலைக்கும் இடங்களுக்குப் போகும் புண்ணியம் இன்னும் எட்டவில்லை. ஆனாலும் சில சந்தர்ப்பங்களில் அப்படியான நண்பர்களின் கேள்விகளில் சிக்கியிருக்கிறேன். கோபப்படாவிட்டால் ஒரு கேள்வி உங்களிடமே கேட்கிறேன். 'நீங்கள் ஒரு லூசு என்பது உங்கள் நண்பர்களுக்குத் தெரியுமா?' ஆம் அல்லது இல்லை என்று மட்டுமே பதில் சொல்க! இது எப்பிடி இருக்கு.

★★★★

காதல் என்றால் என்ன?

லொச்சந்தர், சாவகச்சேரி

அது வேறு எதுவும் அல்ல, உங்கள் எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான் 'காதல்' நீங்கள் தினம் சந்திக்கும் போரைப் போலத்தான். இரண்டையும் ஆரம்பிப்பது சுலபம் முடிப்பதில்தான் சிக்கல்கள் எழுகின்றன.

★★★★

மெய்யன் பதில்கள்

இருக்கிறம்
காத்திருப்பு 1
இருக்கை 9
ஒரு பொல்லாப்பும் இல்லை
ஈகோ பப்ளிசிங் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டட்டால் வெளியிடப்படுகிறது.

ஆசிரியர்
இளையதம்பி தயானந்தா
நிர்வாக ஆசிரியர்
மனோ ராஜசிங்கம்
உதவி ஆசிரியர்
ம. ஸ்கந்த ரூபன்
ஆசிரியர் குழு
எஸ். ரஞ்சகுமார்
சாந்தி சச்சிதானந்தம்
வ. சிவஜோதி
அப்துர் ரஹ்மான்

கௌரவ ஒலியர் ஆசை. இராசையா
ஒலியர்கள்: ஆரியசிறி, மதி புஷ்பா
வடிவமைப்பு க. மயூரன், முஜீன். க. பிரணவன்
தொடர்பு
3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07.
தொலைபேசி: +94 60 2150836 +94 11 2506272
தொலைநகல் +94 11 2585190
இணையம்: www.irukkiram.com
மின்னஞ்சல் irukkiram@gmail.com
கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே.
இதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலர் தினம்

ரோஜாவை மட்டுமல்லாமல் மனங்களைப் பரிமாறி விழிகளால் கதைபேசி... நாமெல்லோரும் களித்திருக்கும் . இந்நாள்...இது உண்மையிலேயே ஒருதுயரந் தோய்ந்த நாள்.

வலண்டைன் என்ற பாதிரியார் கல்லால் அடிக்கப் பட்டு சித்திரவதை செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டு தலை துண்டிக்கப்பட்ட நாள் இது. அந்த நாள் கி.பி 270 ஆவது வருடம்-பெப்ரவரி 14 ஆம் திகதி . இந்த தினம்தான்காதலர்தினம்.

இது ஏன் வந்தது? எப்படித் தொடங்கியது?என்று தெரியுமா?

கொடூரமாகவும் கோமாளித்தனமாகவும் ஆட்சி புரிந்த ரோமானியச் சக்கரவர்த்தி இரண்டாவது கிளாடியின் முட்டாள்தனமான கட்டளைகளால் அவனை விட்டு அவனது இராணுவ வீரர்கள் விலகிப் போயினர். புதிய இராணுவ வீரர்களை அவனால் சேர்க்க முடியவில்லை. யாரும் முன் வந்து



இரண்டாவது தினம்

சந்திரவதனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவத்தில் சேர மறுத்து விட்டார்கள். அவனது மந்திரி பரிவாரங்களுக்கு வீரர்களைச் சேர்ப்பதற்கான ஆக்கபூர்வமான ஆலோசனைகள் எதையும் அவனுக்குக் கொடுக்கவும் முடியவில்லை. இதனால் எரிச்சலுற்றான் கிளாடி.

தனது அந்தரங்க நாயகியுடன் சல்லாபமாக இருந்த நள்ளிரவொன்றில் எரிச்சல் உற்று மறைகழன்ற ரோமானியச் சக்கரவர்த்தி கிளாடியின் மனதில், 'திருமணமானவர்கள் தமது அன்பு மனைவியை விட்டு வர மனமில்லாமலும், திருமணமாகாதவர்கள் தமது காதலியை விட்டு வர மனமில்லாமலும் இருப்பதாலேயே இராணுவத்தில் சேரத் தயங்குகிறார்கள். இவர்களுக்கு எல்லாம் குடும்ப வாழ்க்கை என்ற ஒன்று இல்லாத



பட்சத்தில் இவர்கள் மனம் வெறுத்து இராணுவத்தில் சேருவார்கள். போரிலும் மூர்க்கத் தனமாய் போரிடுவார்கள். வெற்றி எளிதில் கிட்டும்' என்றொரு முட்டாள் தனமான எண்ணம் தோன்றியது.

உடனேயே நள்ளிரவு என்றும் பாராமல் தன் அந்தரங்க அமைச்சரை அழைத்து 'ரோமபுரி நாட்டில் இனி யாருமே திருமணம் செய்யக் கூடாது. ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட திருமணங்களும் ரத்துச் செய்யப் படவேண்டும். இந்த அரச கட்டளையை மீறுபவர்கள் யாராயினும் கைது செய்யப்பட்டு இருட்டுச் சிறையில் அடைக்கப் படுவார்கள். பின்னர் அறிவிக்கப் படும் ஒரு நாளில் பொது இடத்தில் வைத்துக் கல்லால் அடித்து தலை துண்டிக்கப் பட்டுக் கொல்லப் படுவார்கள்' என்ற அறிவிப்பை மக்களுக்குச் சொல்லும் படி பணித்தான். அரசனை மீற வழி தெரியாத அமைச்சர் அதனை அறிவித்தார். இந்த அறிவிப்பைக் கேட்டு மக்கள் அதிர்ந்தார்கள். இருமனங்கள் இணைவதை அரசன்

அறுத்தெறியத் துணிந்த போது திருமணங்கள் கனவாகிப் போனதில் ரோமாபுரி சோகக் கண்ணீரில் மிதந்தது.

அரசனின் இந்த முடிவு அநியாயம் என்று சொல்லிக் கொதித்தெழுந்த கிறிஸ்தவ பாதிரியார் வலண்டைன் அரச கட்டளையை மீறி இரகசியத் திருமணங்களைச் செய்து வைத்தார்.

இந்தச் செய்தி அரசனுக்கு எட்டி விட வலண்டைன் கைது செய்யப்பட்டு இருட்டுச் சிறையில் அடைக்கப்பட்டு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மரணதண்டனை விதிக்கப்பட்டார்.

அவர் சிறை வைக்கப்பட்டிருந்த காலத்தில் சிறைக்காவல் தலைவனின் கண் தெரியாத மகளான அஸ்டோரியஸுக்கும் பாதிரியார் வலண்டைனுக்குமிடையில் காதல் என்னும் அன்பு பூத்தது.

அஸ்டோரியஸ் பாதிரியாரை சிறையிலிருந்து மீட்க முயன்றாள். இதையறிந்த அரசன் அஸ்டோரியசை வீட்டுச் சிறையில் வைத்தான். கண்கள் கிடைத்து விட்டது போன்ற மகிழ்ச்சியில் திளைத்திருந்த அஸ்டோரியஸ் தன் கனவுகள் சிதைந்ததில் கலங்கினாள். ஆனால் வலண்டைனுக்கான மரணதண்டனையில் மாற்றம் ஏதும் ஏற்படவில்லை. அஸ்டோரியஸுக்கு ஒரு காகித அட்டையை வரைந்து விட்டு தண்டனையை ஏற்க அவன் தயாரானான்.

வலண்டைன் கல்லால் அடிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு தலைதுண்டிக்கப்பட்ட அந்தநேரத்தில் அத்தனை கட்டுக் காவல்களையும் மீறி வலண்டைனிடமிருந்து வந்த அந்த அட்டையின் வரிகளை தோழி வாசிக்க அஸ்டோரியஸின் கண்களிலிருந்து கண்ணீர்ப் பூக்கள் சொரிந்தன. அந்த அட்டையிலிருந்த கவிதை வரிகள்

விழி இருந்தும்
வழி இல்லாமல்-மன்னன்
பழி தாங்கிப் போகிறேன்.
விழி இழந்து - பார்க்க
வழி இழந்து, நீ மன
வலி தாங்காது கதறும்
ஒலி கேட்டும், உனை மீட்க
வழி தெரியாமல் மக்களுக்காக
பலியாடாகப் போகிறேன் - நீ
ஒளியாய் வாழ்! பிறருக்கு
வழியாய் இரு!! சந்தோச
ஒளி உன் கண்களில்
மின்னும்!!
-உன்னுடைய
வலண்டைனிடமிருந்து-

அன்றிலிருந்து இன்று வரை நேசிப்பாளர்களிடையே பரிமாறப் படும் வைரவரிகள் இவை. இதுவே முதல் வலண்டைன் மடல். அரச கட்டளையை மீறி மனங்களை இணைய வைத்துத் தன்னையே பலி கொடுத்த பாதிரியார் ரோம் மக்களின் மனங்களில் அழியாத இடத்தைப் பெற்றிருந்தார்.

ரோமனிய தேவாலயங்கள் ஐரோப்பியக் கட்டுப்பாட்டுக்குள் வந்த பிறகு இந்தத் தினம் பாகான் (மதமற்றவன்) தினம் எனக் கொண்டாடப்பட்டது. ஏறக்குறைய 200 வருடங்களுக்குப் பிறகு போப்பாண்டவர் ஒருவரால் வலண்டைன் புனிதராக அறிவிக்கப்பட்டு வலண்டைன் தினம் (St.Valentine's Day) உலகம் முழுவதும் கொண்டாடத் தலைப்பட்டது. இதுவே காதலர்தினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 இதயம் வாழ வழிகள்

மரக்கறியொடு தானியம் தயிருண்

பால், வெண்ணை கடலைகளைத் தவிர்

உள்ளியில் ஆசைகொள்

காசேயானாலும் கோவா, கரட் உண்

ரோசம் போனாலும் உப்பைக் குறை

நேரத்திற்கு உண்

தண்ணி குடி (மற்றதல்ல)

கோப்பியை ரீயாய் மாற்று

உடற்பயிற்சி செய் (கயிறு சுத்தாதே)

மின்தூக்கியைவிட படியேறிப் பழகு

இல்லப் பணி செய்

உடலளவு அறி

புகைக்காதே

குடிக்காதே

தூக்கம் பேண்

இரத்த அழுத்தம் அறி

கொழுப்- பேற்றாதே

காலமறிந்து கடமையாற்று

அழுத்தம் குறை

சிரித்து வாழ்

வைத்தியரைப்- பார்

நீரிழிவைக்- குறை

மூத்தோர் நோயறி

அன்பு கொள்

மருத்துவம் கொள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பூலான்தேவி - 07

பூலான் மாயாதீனின் மீது கொண்ட பகையைப் போல பன்மடங்கு பகையை மாயாதீன் பூலான்மீது கொண்டிருந்தான். அவன் ஆண்பிள்ளை. பணக்காரனும்கூட.

இன்னும் பராயமடையாத பஞ்சப் பராரையான ஒரு சிறுமி அவனை எதிர்கிறாளே. அவனது சூதும் கபடத்தனங்களும் ஊரார் முன் அம்பலமாகின்றனவே, அவனால் தாங்கமுடியவில்லை.

அவனது கோபத்தை மேலும் மலையளவுக்கு வளர்ப்பதற்கான ஒரு காரியத்தை பூலான் செய்தாள்.

பூலானுடைய தோழிகளில் சுக்தேவி என்று ஒரு அழகான பெண் இருந்தாள். அவளுக்கு பூலானை விட ஒன்றிரண்டு வயது அதிகம். திருமணமாகியிருந்தது. பாராயமடைந்தும் விட்டாள். எனினும் அவளது கணவனது ஊருக்கு இன்னும் போகவில்லை. அதற்கு இன்னும் பல மாதங்கள் இருந்தன. இவளுக்கு இன்னும் குடித்தனம் நடத்துவதற்கும் குழந்தை பெறுவதற்குமான பக்குவம் வரவில்லை எனப் பெரியவர்கள் கருதினர்.

ஒரு நாள் விடியற்காலை பூலானது வீட்டுக் கதவைத் தட்டியபடி 'வயலுக்குப் போகிறேன் பூலான், நீயும் வருகிறாயா?' என்று சுக்தேவி கேட்டாள். பூலானுக்கு திறந்த வயல்வெளிகளில் திரிவதில் பிரியம் அதிகம், அதிலும் அதிகாலை வேறு. அதிகாலையில் சுத்தமான காற்றை சுவாசிப்பதைப் போன்ற சுகம் வேறு ஒன்று உண்டா?

பூலானும் குதூகலத்துடன் சுக்தேவியுடன் சென்றாள். அவர்களது வயலை அடைவதற்கு மாயாதீனுடைய வயலைக் கடந்து செல்ல வேண்டும். அங்கே இடுப்புவரை வளர்ந்த கடலைச் செடிகள் நின்றன. அவை அறுவடைப் பருவத்தில் இருந்தன. பூலானுக்கு திடீரென்று பசி எடுத்தது. ஒரு கொத்து கடலையைப் பிடுங்கி வாயில் அதக்கி கொண்டாள். அந்த வயலில் பூலானுக்கும் நியாயப்படி பங்கு உண்டு. அந்த எண்ணமே இன்னும் நிறையப் பிடுங்கித் தின்ன வேண்டும் என்ற அவாவை பூலானுக்குத் தந்தது.

ஒரு சாக்கு நிறைந்த கதிர்களை அவர்கள் பறித்துக் கொண்டு நிமிர்ந்தார்கள். தூரத்தில் மங்கலான ஒரு உருவம் தெரிந்தது. அது மாயாதீனாக இருக்க வேண்டும். வேறு யார் அவ்வளவு நல்ல உடைகளை அணிவார்கள்? ஒரு நிமிடத்துக்குள் மாயாதீன் அவர்கள் அருகில் பாய்ந்து வந்தான். இரு கரங்களாலும் அவர்களது தலைமுடியைப்பற்றிப் பிடித்துக் கொண்டு ஊருக்குள் போனான். சுக்தேவி பயத்தின் காரணமாக அழ ஆரம்பித்தாள். ஆனால் பூலான் சற்றும் கலங்கவில்லை. பொலிஸில் கொடுக்கப் போவதாக மாயாதீன் கத்தியதைக் கூட அவள் பொருட்படுத்தவில்லை.

அவளுக்கு ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிந்தது. அவர்களை பஞ்சாயத்தின் முன் நிறுத்தி அவர்களது பெற்றோர்களிடம் திருட்டுக்கான தண்டப்பணமாக மிக அதிகமான ஒரு தொகையை அநியாயமாக வசூலிப்பார்கள். பூலானின் பெற்றோர்களிடம் தான் பணம் இல்லையே, இருக்கின்ற ஒரு சிறு தொகையும் அவளது கல்யாணத்துக்காக சிறுகச் சிறுகச் சேமிக்கப்பட்டது.

வேப்பமரத்தின் கீழ் ஒரு தூர்க்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது கல்யாணம் இந்த அபராதத்தால் மேலும் தள்ளிப் போகப் போகின்றது.

சிறுமிகளை பஞ்சாயத்து முற்றத்தில் தரையில் உட்கார வைத்தார்கள். ஊருக்குள் பறையறைவித்து சேதி சொல்லப்பட்டது. பஞ்சாயத்து தலைவன் கிஷ்ணா தனது கழுகுக் கண்களால் உறுத்துப் பார்த்தபடி வந்தான். அவன் மாயாதீனின் நெருங்கிய நண்பன். பூலானது அம்மாவும், அப்பாவும், சுக்தேவியின் பெற்றோர்களும் வந்து விட்டனர். ஊரார் எல்லோரும் வந்து சேர்ந்த பின்னரும் பஞ்சாயத்து உறுப்பினர்கள் வந்து சேரவில்லை. அவர்கள் வரும் போது மதியம் திரும்பியிருந்தது. அவர்கள் எல்லோரும் பெரிய பண்ணையார்கள். எல்லோருமாக கிராமத் தலைவன் வீட்டில் ஆலோசனை செய்து விட்டு வெளியில் வந்தார்கள்.

தீர்ப்பு சொல்லப்பட்டது.

சுக்தேவியின் வீட்டார் சுக்தேவி திருடியதற்காக நூறு ரூபாய் அபராதம் செலுத்த வேண்டும். ஒரு பிடி கடலைக்காக நூறு ரூபாய், பூலான் திருடவில்லை. அவளது குடும்பத்துக்கும் அந்த நிலத்தில் பங்கு உண்டு. எனவே அவர்கள் அபராதம் கட்டத் தேவையில்லை.

ஆச்சரியமான ஆச்சரியம். பூலான் வென்றுவிட்டாள். பஞ்சாயத்து அவர்களுக்கும் நிலம் உண்டு என்று ஒப்புக் கொண்டிருக்கிறது. பூலான் துள்ளிக் குதித்தாள்.

ஆனால் மாயாதீன் நெருப்பாக எரியும் கண்களுடன் தேவிதீனிடம் வந்தான். இது அநியாயம் தேவிதீன். நீங்கள் உண்மையில் குற்றப்பணம் செலுத்த வேண்டும். தப்பிவிட்டீர்கள். உங்கள் வாழ்க்கையை நான் நாசமாக்குவேன். அந்தத் திமிர் பிடித்த பூலான் பெட்டைநாயை ..... அவன் பற்களை நறநறவெனக் கடித்துக் கொண்டான்.

ஆனாலும் அடுத்த ஓரிரு மாதங்களுக்குள் பெரிதாக ஒன்றும் நிகழவில்லை.....

முன்று மாதங்கள் கழிய பூலானுக்கு திருமணம் நிகழ்ந்தது.

தொடரும்....

நிண்டு மினக்கடாதை

துவக்கி வைச்ச கையெல்லாம்
தூரத்துக்குப் போட்டுதெண்டோ
துவக்கெடுத்த கையெல்லாம்
துடிதுடிக்கப் போடுதுகள்

அண்டைக்குப் போடேக்கையும்
நிண்டு கேக்கேல்லை
இண்டைக்குப் போடேக்கையும்
நிண்டு கேக்கேல்லை
நாளைக்குப் போட்டாலும்
நாங்கள் ஏனெண்டு கேக்கம்
ஏனெண்டா
வாங்கி விழுகிறவனும்
அம்மா... எண்டுதான்
ஆவெண்டழுகிறான்

போட்டிட்டு ஓடுறவன்
தடக்கி விழுந்தா - அவனும்
அம்மா.....' எண்டுதான்
ஆவெண்டழுகிறான்

பிறகென்ன
நாங்களேன் நடுவுக்க
நிண்டு மினக்கடுவான்
நடவடா வேலையைப்பார்.

– பனையடிப்பாடகன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வானொலிக் கால நினைவுகள்

கே.எஸ்.பாலச்சந்திரன்

76-77 காலப்பகுதியில் 'தணியாத தாகம்' நாடகத் தொடர் ஒலிபரப்பு ஆரம்பமானது. 'தணியாத தாகம்' தொடர் ஆரம்பித்த சில வாரங்களில், ஏராளமான நேயர்கள் வானொலி நிலையத்திற்கும், மக்கள் வங்கி முகவரிக்குமாக பாராட்டுக்கடிதங்கள் எழுதத் தொடங்கினார்கள். சோமுவையும், தங்கைகள் யோகம், கமலி இருவரையும் தங்களின் உடன்பிறப்புகளாக நினைத்து, அவர்களின் துன்பங்களுக்காக கண்ணீர் விட்டு, அவர்களின் சந்தோசங்களில் மகிழ்ச்சி அடைவதாக அந்தக்கடிதங்கள் வந்தன. நாட்டின் மூலை முடுக்கில் இருந்தெல்லாம் ஞாயிறு தோறும் நாலரை மணிக்கு வீடுகளில், தோட்டங்களில், வயல் வரப்புகளில், டிரான்ஸிஸ்டர் ரேடியோக்களோடு காத்திருக்கிறோம் என்றார்கள். வானொலி இல்லாதவர்கள் இருக்கின்ற வீடுகளுக்கு அந்த நேரத்துக்கு வந்து சேர்ந்தார்கள். யாழ்குடாநாட்டில் ஞாயிறு 4.30 - 5.00 நேரப்பகுதியில் தனியார் கல்வி நிறுவனங்கள் தங்கள் வகுப்புகளை நடத்தாமல் விட்டன. பிள்ளைகள் வரமாட்டார்கள் என்று அவர்களுக்குத் தெரிந்தது.

யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்த இ.போ.ச. பஸ் ஒன்று ஞாயிறு 4.30க்கு 'அத்தானே அத்தானே எந்தன் ஆசை அத்தானே.. கேள்வி ஒன்று கேட்கலாமா உன்னைத்தானே' என்று சில்லையூரார் - கமலினி பாடும் ஆரம்பப்பாடல் ஒலிக்க, பஸ்ஸில் இருந்த பிரயாணிகளின் ஏகோபித்த வேண்டுகோளுக்கு இணங்க, திருநெல்வேலி தேனீர் கடைக்கு முன்னால் பஸ் நிறுத்தப்பட்டு, தணியாத தாகம் கேட்கப்பட்டதாக யாரோ சொல்லக்கேட்டு ஆனந்தமடைந்தோம்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு அபிமான நேயர், "சோமு" வின் குடும்பக்கஷ்டத்தை பொறுக்க முடியாமல் 100ரூபாவுக்கான காசோலையை அனுப்பியிருந்தார். தெல்லிப்பளையிலிருந்து மூன்று சகோதரிகள் தொடர்ந்து தங்கள் கருத்துக்களை நீண்ட கடிதங்களில் எழுதி அனுப்பினார்கள். நாடகத்தை வானொலிக்கு ஏற்றவகையில்

மாற்றி எழுதி வழங்கிய கே. எம். வாசகர், முடிவிலே இந்த சகோதரிகளின் விருப்பப்படி சிறு மாற்றம் ஒன்றைச் செய்யும் அளவிற்கு அவர்களது பங்களிப்பு இருந்தது.

நாடகத்தில் நான் பல்கலைக்கழகத்தில் ஒரு கலைவிழாவில் நிகழ்த்துவதாக அக்காலத்தில் பிரசித்தி பெற்று விளங்கிய எனது தனி நடிப்பு நிகழ்ச்சியான 'அண்ணை றைற்', கே. எம். வாசகர் கேட்டுக் கொண்டதற்கிணங்க சேர்த்துக் கொள்ளப்பட்டது. இந்த நாடகம் முடிவடைந்த பின்னர் இதைத் திரைப்படமாக்க விரும்பி ஒரு வர்த்தகப் பிரமுகர் நிலையத்துக்கே வந்தார். ஆனால் ஏனோ அது நிறைவேறவில்லை.

'தணியாத தாகத்தில்' நடித்த நால்வர் ஒரே கிராமத்தைச் (கரவெட்டி) சேர்ந்தவர்கள். கே. எஸ். பாலச்சந்திரன் (நான்தான் சோமு), கே. மார்க்கண்டன் (மாமா) செல்வநாயகி தியாகராஜா (மாமி), மொறீன் கனகராயர் (சோமுவின் காதலி) என்பவர்களே அவர்கள்.

இத்தொடர் நாடகத்தின் இறுதிக்காட்சி ஒலிப்பதிவு செய்யப்பட்ட பொழுது, யோகத்தின் மரண ஊர்வலக் காட்சியில், ஒலித்த பறை ஓசை, மாமா (கே. மார்க்கண்டன்) பாடிய திருவாசகப் பாடல், யோகத்தின் குரலிலும், என் குரலிலும் ஒலித்த யோகத்தின் கடைசிக்கடிதம், பின்னணி இசை என்று எல்லாமாகச் சேர்ந்து ஒலிப்பதிவைப் பார்க்க வந்திருந்த நிலையஒலிபரப்பாளர்களையே கண்ணீர் சிந்த வைத்தது. நடிகர்களாகிய நாங்களும் கண்ணீரை அடக்க முடியாமல் தடுமாறினோம். நீண்ட நாட்களாக அந்த பாதிப்பிலிருந்து விடுபடமுடியாமல் தவித்தோம். இப்படி ஒரு சிறந்த வானொலி நாடகம் நிறைவெய்தியது.

மழைவிட்டும் தூவானம் விடாத கதையாக 'தணியாத தாகத்தின்' நேயர்கள் அதை மறப்பதாயில்லை. கடிதங்கள் பொதிகளில் நிரம்பி வழிய வந்தன. அந்தக்கடிதங்களை நடித்தவர்களில் சிலரே மாறி, மாறி வானொலியில் வாசித்தார்கள். அதாவது கடிதங்கள் வாசிப்பதே பல வாரங்களாக ஒலிப்பரப்பாகியது.

இவ்விடத்தில் ஒரு அனுபவக்குறிப்பு நினைவுக்கு வருகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தோல்வியில் யாரும் பங்குபெற விரும்பமாட்டார்கள். அப்படியே கருத்துச் சொல்ல நேர்ந்தாலும் "உன்னால்தான்... உன்னால்தான்" என்று மற்றவர்கள் மேல் பழிபோடுவார்கள். ஆனால் வெற்றியடைந்துவிட்டாலோ..." என்னால் தான்... என்னால்தான்" என்று பெருமைப்பட்டுக் கொள்வார்கள்.

"தணியாத தாகம்" நாடகத்தின் இறுதிக்காலத்திலே இந்தக்கோஷங்கள் ஒலிக்கத் தொடங்கியதுதான் பெரிய சோகம். இதன் விளைவு ஒரு அற்புதமான நாடகத்தின் கலைஞர்கள் இரு துருவங்களாகப் பிரிந்து கொண்டார்கள். இதனால் ஆத்மார்த்தமாக மனவேதனையடைந்தவர்கள் இருவர். ஒன்று நான். மற்றவர் அவுஸ்திரேலியாவில் அற்ப ஆயுளில் மறைந்து போன என் நண்பனும் நாடகத்தில் 'குமார்' பாத்திரத்தில் நடித்தவனும், நல்ல எழுத்தாளனுமாகிய வாசுதேவன்.

இருவரும் கடைசிநேரம் வரை இரண்டு பக்கத்தைச் சார்ந்தவரையும் இணைக்க பெருமுயற்சிகள் எடுத்தோம். ஆனால் சமாந்தரக் கோடுகளைப்போல அவர்கள் இணைய மறுத்து விட்டார்கள். கடைசியாக பம்பலப்பிட்டி கிறீன்லாண்டில் நடந்த 'தணியாத தாகம்' கலைஞர்களுக்கான விருதுவழங்கும் விழாவிலே நாடகத்தின் படைப்பாளி சில்லையூர் செல்வராஜனும், 'கமலி' கமலினி செல்வராஜனும் கலந்து

கொள்ள முடியாமற் போனதுதான் கவலையான விஷயம். ஆனாலும் இந்நாடகத்தில் நடித்த கலைஞர்களாகிய நாங்கள் (நான் உட்பட) தொடர்ந்தும் 'தணியாத தாகம்' நாடகத்தின் புகழில் நீண்ட நாட்களாக குளிர் காய்ந்து கொண்டிருந்தோம்.

1978 ஜனவரி மாதம் நான், விஜயாள் பீற்றர், வாசுதேவன் உள்ளிட்ட 'தணியாத தாகம்' கலைஞர்கள், யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திலும், தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரி மைதானத்திலும் தோன்றி நாடகத்தின் சில கட்டங்களை நடித்துக்காட்டினோம். ரசிகர்கள் திரளாக வரத்தான் செய்தார்கள். ஆனாலும் வானொலி நாடகத்தைக் கேட்டு அவர்கள் மனதில் உருவகித்து வைத்திருந்த பாத்திரங்களாக எங்களை நேரில் காணும்போது அவர்களால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை.

இதேபோல தனிப்பட்ட முறையிலும் எனக்கு சில அனுபவங்கள் கிடைத்தன. 1977இல் நானும், நண்பர் ஏ.ஈ. மனோகரனும் பேசாலையில் நடந்த 'வாடைக்காற்று' படப்பிடிப்பில் கலந்து விட்டு, யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியில் நடந்த ஒரு பிரமாண்டமான களியாட்ட விழாவில் நிகழ்ச்சி செய்வதற்காகச் சென்றோம். (இங்கு நடைபெற்ற ஒரு சம்பவத்தின் தொடர்ச்சியாகவே 77ம் ஆண்டின் கலவரம் நிகழ்ந்ததாக கூறப்படுகிறது.)

இங்கு எனது 'அண்ணை றைற்' நிகழ்ச்சி நடக்க இருந்தது. நிகழ்ச்சி ஆரம்பிப்பதற்கு சற்று முன்னதாக என்னை அறிமுகம் செய்தவர், 'தணியாத தாகம்' நாடகத்தில் சோமு பாத்திரத்தில் நடித்தவர் என்று கூறினார். பார்வையாளர்களில் அநேகமானோர் அதை நம்பத் தயாராகவிருக்கவில்லை. ஏறக்குறைய அக்கால 'பொப்பிசை' பாடகரைப் போன்ற சிகையலங்காரத்துடனும், ஆடை அணிகளுடனும் மேடையில் தோன்றிய என்னை, ஒரு ஏழைக்குடும்பத்தின் மூத்தமகனான, சாந்தமும், பணிவுமுள்ள சோமு அண்ணனாக அவர்களால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. அதை என் காதுபடச் சொல்லவும் செய்தார்கள். கடைசியில் அமைப்பாளர்களின் அனுமதியுடன், 'தணியாத தாகத்தின்' இறுதிக்கட்டத்திலிருந்து, சோமு அண்ணன் சொல்லும் "என்ரை தங்கைச்சி யோகம் சீதனம் தேடி ஊர்வலம் போகிறாள்.. ஒருத்தரும் அழ வேண்டாம்" என்ற வசனத்தை நான் பேசிக்காட்டவும் சபை ஸ்தம்பித்துப் போய் நின்றது. இன்றும் அதை நினைக்கும் போது சிலிர்த்துக் கொள்கிறேன்.

தணியாதாகம் குழுவினர்

அண்மைக்காலம் வரை நான் மேடையில் தனியாக நிகழ்ச்சி செய்ய நேர்ந்தால் மேற்குறிப்பிட்ட வசனங்களைப் பேசி நடித்துக் காட்டுவதை வழக்கமாக வைத்திருக்கிறேன். அதுவே என் அடையாள முத்திரையாகிவிட்டது.

தணியாத தாகங்களும்
அழியாத நினைவுகளும்
தொடரும்....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கலைந்த பக்கங்கள்...

மயில்வாகனம் சர்வானந்தா

தியாகராஜபாகவதரின் காலத்தை 8.11.1944க்கு முந்திய காலம் என்றும் 25.4.1947க்கு பிந்திய காலம் என்றும் பிரித்துப் பார்த்தால் அவரின் சினிமாக் கால ஏற்ற இறக்கங்கள் புரியும். 1939 இல் வெளிவந்தது திருச்சையைப்பற்றி தியாகராஜா ரோக்கிஸ் திருநீலகண்டர் நீலகண்டம்... நீலகண்டம் என உச்சரிக்கும் கதாநாயகன் தியாகராஜபாகவதர்.

★ உன் அழகைக்காண இரு கண்கள் போதாதே
★ சிதம்பரநாதா திருவருள்தா
★ ஒரு நாள் ஒரு பொழுதாகிலும்
★ தீன கருணாகரினே நீல கண்டனே போன்ற பாடல்கள் மிகவும் ஹிட்டாயின. இதன் டைரக்டர் எல் லீஸ். ஆர். டங்கன். 1941 செப்ரெம்பரில் 'அசோக்குமார்' படம் வெளியாகியது. இதில் பாகவதருடன் வி. நாகையா, கண்ணப்பா, குமுதினி போன்றோர் நடித்தனர்.

★ உனைக் கண்டு மயங்காத பேர்களுண்டோ?
★ மானிட வாழ்வு பெரும் ஆனந்தம்
★ தியானமே என்னை நிறைத்தது
★ மனமே நீ ஈசன் நாமத்தை
★ சர்வ குண போதன் போன்ற பாடல்கள் மிகவும் பிரபலமான பாடல்களாக விளங்கின.

நடிப்பால், பாடல்களால் பிரபலமான பாகவதர், தன்னை வைத்து படம் எடுக்க வருபவர்களிடம் நிபந்தனைகள் விதிக்கத் தொடங்கினார். தனது படங்களுக்கு வசனம் இளங்கோவன் எழுதவேண்டும், பாடல்களை பாபநாசம் சிவன் புனையவேண்டும் அப்போதுதான் தான் படங்களில் நடிக்க ஒப்புக் கொள்வதாகவும் கூறினார்.

1943இல் 'சிவகவி' படம் வெளிவந்தது. இதில் அவருடன் கதாநாயகியாக நடித்தவர் டி. ஆர். ராஜகுமாரி இதன் டைரக்டர் பட்சிராஜா ஸ்ரீராமுலு நாயுடு.

★ வதனமே சந்திரபிம்பமோ
★ கவலை தீர்ப்பது நாட்டியக் கலையே
★ சொப்பன வாழ்வில் மகிழ்ந்து
★ வள்ளலைப் பாடும் வாயால்

இவை பாகவதரின் புகழை உச்சிக்குக் கொண்டு சென்ற பாடல்கள். 1944 ஆம் ஆண்டு தீபாவளியன்று வெளிவந்தது 'ஹரிதாஸ்'. ஹரிதாஸாக - பாகவதரும், தாசி ரம்பாவாக டி.ஆர். ராஜகுமாரியும், மனைவி லட்சுமியாக வசந்த கோகிலமும் நடித்திருந்தனர். ஹரிதாஸ் படத்தைப் பார்த்த ரசிகர்கள் மீண்டும் மீண்டும் திரையரங்கை முற்றுகையிட்டனர். பாடல்களில் மயங்கினர். வசனத்தால் வசீகரிக்கப்பட்டனர். நடனத்தால் ஈர்க்கப்பட்டனர். இதன் டைரக்டர் சுந்தர்ராவ் நாண்கர்ணி.

★ வாழ்விலோர் திருநாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★மன்மதலீலையை வென்றார் உண்டோ.
★ என் உடன் தனியொரு
★அன்னையும் தந்தையும் தானே
★கிருஷ்ணா முகுந்தா முராரே.

என்ற பாடல்கள் பட்டி, தொட்டியெங்கும் பரவியது. எந்தவொரு படத்திற்கும் இல்லாத வரவேற்பு இதற்கு இருந்தது, தியேட்டரை நோக்கி ரசிகர் வெள்ளம் அலைமோதியது.

1944 தீபாவளிக்கு வெளிவந்த ஹரிதாஸ் 1945 தீபாவளி 1946 தீபாவளி என மூன்று தீபாவளிகளை கொட்டகையில் கொண்டாடியது.

ஹரிதாஸ் ஓஹோவென்று ஓடத்தொடங்கியதும் பட முதலாளிகள் பாகவதரை ஒப்பந்தம் செய்ய வரிசையில் நின்றனர். 'ராஜயோகி', 'உதயணன்- வாசவதத்தை', 'ஜீவகன்' உள்ளிட்ட 12 படங்கள் ஒப்பந்தமாகியிருந்தன.

சென்னையில் 1944 டிசம்பர் 27 ஆம் திகதி 'உதயணன் - வாசவதத்தை' படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்த வேளையில் பாகவதர் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

சினிமா நடிகர், நடிகை பற்றிய அந்தரங்க விடயங்கள் தற்போது பத்திரிகை, சஞ்சிகைகளில் வருவது போல அந்நாட்களில் கிசு, கிசு செய்திகளுக்கு என்று மட்டுமே ஒரு பத்திரிகை வெளிவந்தது. அதன் ஆசிரியர் லட்சுமிகாந்தன். சென்னை வேல்பேரி காலின்ஸ் வீதியில் ரிக்ஷாவில் சென்று கொண்டிருந்த லட்சுமிகாந்தன் வழியில் மறிக்கப்பட்டு கத்தியால் குத்தப்பட்டார். மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட அவர் மறுநாள் காலமானார்.

ஹிந்து பத்திரிகையில் பணியாற்றிய வடிவேலு, குத்துச்சண்டை வீரர் ஆரியவீரசேனன், பால்காரர் நாகலிங்கம், கடைக்காரர் ராஜபாதர், தியாகராஜபாகவதர், என். எஸ். கிருஷ்ணன் பட்சிராஜா ஸ்ரீராமுலு நாயுடு ஆகியோர் ஒருவர் பின் ஒருவராக கைதாகினர்.

'லட்சுமிகாந்தனுக்கும், வடிவேலுவுக்குமிடையே உள்ள விரோதத்தை அறிந்த பாகவதர், என். எஸ். கிருஷ்ணன், ஸ்ரீராமுலு நாயுடு ஆகியோர் அவருக்கு லட்சுமிகாந்தனிடம் உள்ள சொந்த மனஸ்தாபத்தை மேலும் தூண்டிவிட்டு, பொதுவிரோதியான லட்சுமிகாந்தனை அவர் கொலை செய்யும்படி செய்தார்கள், இந்தப் பொறுப்பை அவர்கள் ஆரியவீர சேனனிடம் ஒப்படைத்தார்கள்' என்பது குற்றச்சாட்டின் ஒரு பகுதி.



1945மே மாதம் 2 ஆம் திகதி வழக்குத் தீர்ப்பின் போது ஆரிய வீரசேனன், வடிவேலு, நாகலிங்கம், ராஜபாதர், தியாகராஜபாகவதர், என் எஸ். கிருஷ்ணன் ஆகியோருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. லண்டன் பிரிவு கவுன்சிலுக்கு அப்பீல் செய்யப்பட்டு சென்னை உயர் நீதிமன்ற மறு விசாரணையில் 1947 ஏப்ரல் 25ஆம் திகதி பாகவதரும், என். எஸ். கிருஷ்ணனும் விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்ட பின்னர் பாகவதரின் திரைப்படத்துறை வாழ்வு பிரகாசமாக இருக்கவில்லை. முன்னர் ஒப்பந்தம் செய்திருந்த படங்களில் உதயணன்-வாசவதத்தையில் பாகவதருக்குப் பதிலாக ஜி.என்.பாலசுப்பிரமணியம் ஒப்பந்தமானார். அது 1946 இல் வெளிவந்திருந்தது. அதேபோல் 'ராஜயோகி' படத்தை ஒப்பந்தம் செய்திருந்த ஏ.வி.மெய்யப்பச் செட்டியார், அந்தத் திட்டத்தையே கைவிட்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விடுதலையான பின்னர் பாகவதர் சொந்தமாக 'நரேந்திரா பிக்சர்ஸ்' என்ற கம்பனியை உருவாக்கி 'ராஜமுக்தி' என்ற படத்தைத் தயாரித்து வெளியிட்டார். 1948 இல் வெளியான இத்திரைப்படம் வெற்றி பெறவில்லை. இதில் பாகவதருடன் பானுமதி, வி.என்.ஜானகி ஆகியோர் நடித்திருந்தனர். இதன் இயக்குநர் ராஜா சந்திரசேகர். 1952 இல் பாகவதர், எஸ் வரலட்சமி ஜோடியாக நடித்து வெளிவந்தது 'சியாமளா', இவை இரண்டும் எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை. 1957இல் பாகவதர், மாதுரிதேவி, லலிதா ஆகியோர் நடித்து பாகவதரின் டைரக்சனில் வெளிவந்தது 'புதுவாழ்வு'. 1934முதல் 1944வரை ஒன்பது மகத்தான படங்கள் பாகவதருக்கு, ஆனால் 1947க்குப் பின் வந்த எந்தப் படமும் வெற்றி பெறவில்லை. புராண பக்திப் படங்களையும், படம் முழுக்க பாடல்களையும் கேட்டும் பார்த்தும் ரசித்து வந்த ரசிகர்கள் தமது ரசனையில் மாற்றத்தை எதிர்பார்த்தார்களோ என்று எண்ணும் வகையில் இந்த வெற்றி பெறாத படங்களை எண்ணிப் பார்க்கத் தோன்றுகிறது.

வளரும்.....

பரந்த வெளியெங்கும்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர் மச்சானுக்கு



எழுத்தாளர் மச்சானுக்கு!
இளையதம்பி எழுதுவது:
நலமாக இருக்கிறாயா?
நான் கடவுள் புண்ணியத்தில்
நலந்தான்; அதுபோலுன்
நலமறிய விரும்புகிறேன்.

நான்கடிதம் எழுதினாலும்
நீ எழுதிப் போட்டதில்லை
ஏனுனக்கு எழுத்து வேலை
எக்கச்சக்கம் என்பதாலா?
நானொருவன் இருப்பதையே
நீ மறந்து போனதென்ன?

உன் மனைவி மக்களுக்கு
உன்னெழுத்தை மட்டுமல்ல
உன்முகத்தைக் கண்டாலும்
ஒருநாளும் பிடிக்கா தென்று
சின்னராசா வந்து சொன்னான்
சீ இதென்ன வாழ்க்கை மச்சான்!

"எழுத்துவேலை சோறிடுமா?
இதனை நம்பி மினக்கெடாமல்
பிழைக்கவேறு வழிபா" ரென்று
படிக்கின்ற போதுசொன்னேன்
பிழையாக அதை நினைத்து
பெருஞ்சண்டை நீ பிடித்தாய்!

இரவுபகல் கதையெழுதி
எதைப் பெரிதாய்க் கிழித்துவிட்டாய்?
ஒருவராச்சும் உன்னெழுத்தால்
ஊருக்குள் திருந்தினரா?
பிறகேன்தான் இந்தவேலை?
பேசாமல் எறிடா தூக்கி

பாடுபட்டு உழைத்திருந்தால்
பலநூறு சேர்த்திருப்பாய்
வீடுபோற்ற மகிழ்ச்சியோடு
வேந்தனாக வாழ்ந்திருப்பாய்
பாராட்டும் புகழும்சேர்த்தாய்
பட்டகடன் தீர்த்தாயில்லை!

பொன்னாடை போர்த்திநின்றாய்
பூமாலை போட்டு உன்னை
பன்னாடை ஆக்கிவிட்டார்!
பரிதாபம் உனது வாழ்க்கை!
பொன்பொருள் பணமில்லாமல்
பூமியில் வாழ்தல் கஷ்டம்!

கதை பாட்டு எழுதியிங்கே
காசுழைக்க முடியாமச்சான்!
இதை விடுத்து நாலுபணம்
இனியாச்சும் உழைத்தாலென்ன?
இதைச்சொல்லும் என்னைவைத்து
எழுதாதே நீ கதைகள்!

மனம்மாறித் திருந்தினால் நீ
மறக்காமல் கடிதம் போடு.
இனத்தோடு சேர்ந்து மச்சான்
என்வாழ்த்தும் வந்து சேரும்!
மனைவி மக்கள் உன்னைவாழ்த்தி
மகிழ்கின்ற நாளைக் காண்பாய்!!

கவிஞர் செ.குணரட்னம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கச்சியும்மா!

நவாஸ்

எனக்கு என்னமோ பெரியவங்கட அனுபவத்த அவங்களோட உரையாடிறதில ஆசை. அந்த உரையாடலுக்குள்ள சின்னச் சின்ன கேள்விகளக் கேட்கனும். அத எவ்வளவுக்கு எவ்வளவு நுட்பமா விளங்கிக் கொள்ள முடியுமோ, அவ்வளவுக்கு அவ்வளவு நுட்பமா விளங்கிக்கனும். அப்படியானவங்களோட தொடர்ந்தும் உறவப் பேணனும் என்றெல்லாம் அலாதிப் பிரியமும் ஆசையும் இருக்கு.

இப்படியான ஆக்களோட கதைச்சிட்டு இருக்கிறதில நேரம் போறயும் விளங்காது.

"தங்கச்சியும்மா" என்ற பெயருல இன்னொரு பேப்பர்ல இதுக்கு முதலும் நான் எழுதி இருக்கன் அதுல நல்ல அனுபவம் எனக்கு.

இதுல ஒரு.... வித்தியாசமான ஒராலப் பத்தி எழுதப் போறன்.

அவவ எனக்கு என்ட கூட்டாளி மூலமா தெரியும். அவன் என்ட நெருங்கிய கூட்டாளி. 5ஆம் ஆண்டுல இருந்தே ரெண்டு பேரும் ஒண்டாத்தான் படிச்சம். அதுக்கு பிறகு கொலேஞ்சிக்கு இருவரும் வந்துட்டம். அங்கேயும் பல வருஷம் ஒண்டாத்-தான் இருந்தம் அப்படியொரு நட்பு.

அவன் எனக்கிட்ட அவன்ட விசயம் எல்லாத்தையும் சொல்லுவான் நல்ல பொடியன் நல்ல மனசு சரியான கூச்ச சுபாவம் எதையும் வாய் திறந்து சொல்ல மாட்டான். அதால அவன்ட நண்பனையும் தாண்டி அவன்ட சுக துக்கங்கள் நாளாந்த வாழ்க்கையில கலந்து கொள்ர சகோதரனாகவும் எந்த உதவி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செய்யும் போதும் எதையும் பார்த்து பார்க்காத ஒரு பேரன்ட்ஸ் மாதிரியும் நடந்துக்குவேன்.

அது சரி என்ன அவனப் பத்தியே அதிகம் செல்றன்!... என்னவாசிக்க போரா இருக்கா?

சரி... விசயத்துக்கு வாறன்.

நான் செல்ல வர்ர அவவ எனக்கு அவன்தான் அறிமுகப் படுத்தினான். அவக்குட்ட நிறைய கதச்சன். அப்பத்தான் தோன்றிச்சி கிராமத்துல இருக்கும் பெண் நகரத்த நோக்கி வரும் போது என்னனென்ன பிரச்சினை எதிர் நோக்குறா. பிரச்சினையை எதிர் நோக்கினாலும் அவட ஆளுமையில எப்படியான மாற்றங்களை அது ஏற்படுத்துது என்ற விசயமெல்லாம். அதயெல்லாம் கொஞ்சம் கொஞ்சமா விளங்கிக்கிட்டன்.

நான் சொல்றத விட அவக்குட்டேயே கேட்டுப் பார்ப்போமே.

அவ சென்னா 'எனகுட்ட கதக்கிற சரி இதெல்லாம் பேப்பர்ல எழுதுரண்டாலும் என்ட பேர போட வேணாம்'.

'அப்படி எல்லாம் ஒன்டும் இல்ல சும்மா சொல்லுங்க'.

நான் .... எழுதற அந்த நேரத்திலதான் எனக்கு கல்யாணம் நடந்திச்சி அப்ப எனக்குச் சமைக்கக் கூட தெரியாது. அவரு கொழும்புலதான் இருந்தாரு. அப்ப நான் நினைக்கன் அவரு படிச்சிக் கொடுத்துட்டு இருந்தாரு போல. அப்ப கல்யாணம் முடிச்சி ஒரு மாசமோ இரண்டு மாசமோ ..... ஆங்.. எனக்கு சரியா ஞாபகம் இல்ல.... இங்க கூட்டிட்டு வந்துட்டாரு.

நான் கிராமத்துல இருந்து வளந்ததால எப்படியான மனநில இருந்திருக்கும்ன்டு உங்களுக்கு சொல்லத் தேவயில்ல. அதுவும் நான் முஸ்லிம் பண்பாட்டுக்குல்ல இருந்து வளந்தவ.

அந்தச் சூழல் எனக்குட்ட எந்த தைரியத்தையும் தரல்ல எப்போதும் வீட்டுக்குள்ளதான் இருப்பன். பெருசா வெளிய போனதும் இல்ல.

அப்ப எனக்கு சமைக்க கூட தெரியாது. வீட்டுல நான் கடைசி பொம்புளப் புள்ள என்றதால செல்லமா ஊறும் உலகமும் தெரியாம வளந்தவ.

இப்படி பிண்ணணியில நான் திடீரெண்டு கொழும்புக்கு வந்தா எப்படியிருக்கும்.

அத நான் பொறவு செல்றன். கொஞ்சம் பொறுமையா இரிங்க.....

தங்கச்சி உம்மா!

வாழ்க்கையும்! நம்பிக்கையும்!

நீங்கள் இன்று வாழ்வதை விட இன்னும் நன்றாக வாழலாம் என எப்போதாவது நினைத்திருக்கின்றீர்களா? இதை விட இன்னும் சிறப்பாக வாழ்ந்திருக்கலாம் என்ற நினைப்பு உங்களைப் போலவே எல்லோருக்கும் இருக்கிறது. ஆனால் எப்படி என்பதில் தான் பலர் குழம்பி இருக்கின்றார்கள். இன்னும் சிலருக்கு எப்படி என்பதுகூடத் தெரியும். ஆனால் இருப்பதைவிட்டு அறிந்த புது வழியில் நுழைவதில் பயங்கள் ஆயிரம். புதுப் பாதையின் மீது கொள்ளாத நம்பிக்கை அவர்களை புதிதாய் ஒன்றைச் செய்ய விடுவதில்லை. இதனை வென்றெடுப்பதற்கு நாம் பல விடயங்களை விட்டு கொடுக்க வேண்டியிருக்கலாம். நீண்ட காலமாக, நீங்கள் செய்து வந்த தொழில் முறையை மாற்ற வேண்டியிருக்கலாம். ஆனால் அப்படியான மாற்றத்தை செய்து கொள்ள முதலில் நம்பிக்கை கொள்ள வேண்டும். சரி மாற்றத்தை செய்து விடலாம் என்று எண்ணினால் உங்களது மனைவியோ அப்பாவோ இப்ப இருக்கிற மாதிரியே இரு என்று சொல்வார்கள். உங்கள் கனவுகளை நனவாக்க முயல்வதில் ஏற்படும் ஆயிரம் தடைகளில் முக்கிய தடைகள் இவை. இது வரை நீ செய்த ஒன்றைத் தவிர, புதிதாக ஒன்றைச் செய்ய முயல்வதை எவரும் ஏற்று கொள்வதில்லை. வாழ்க்கை என்பது வாழ்வதற்கானது வெற்று வெறுமனே காசு உழைப்பதற்கானது அல்ல. வாழ்க்கையை காசு தேடுவதற்கு என்று நினைத்து வாழ்ந்தாலும் நீங்கள் பல விடயங்களை இழக்க வேண்டித்தான் இருக்கும். அதை விட நீங்கள் ஆத்மார்த்த ரீதியாக ஒன்றை செய்ய முயற்சித்தால் எல்லாமே மாறும். உங்கள் சிரித்த முகம் எல்லோரையும் ஈர்க்கும். நம்பிக்கையோடு வாழ்ந்தால் உங்கள் முகத்தில் தெளிவும் கவர்ச்சியும் ஒட்டிக்கொள்ளும். உங்கள் வாழ்க்கையை உயர்வாக இட்டுச் செல்லும் வாகனம் உங்கள் நம்பிக்கை. அதன் மீது ஏறி பயணத்தை தொடர்ந்தால் என்ன?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே

செ.யோகநாதன் நினைவாக
செங்கை ஆழியான்

ஈழத்தமிழுலகு நன்கு அறிந்த படைப்பாளியான செ.யோகநாதன் கடந்த மாதம் 28ஆம் திகதி காலமானார். அவருடைய இறுதிச் சடங்குகள் ஜனவரி 30 அன்று யாழ்ப்பாணம் மூத்த விநாயகர் கோயில் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது. அன்று இடம்பெற்ற அஞ்சலி நிகழ்விற்கு தலைமை தாங்கிய சமகாலப் படைப்பாளி செங்கை ஆழியான் தன் நினைவுகளை இங்கு பகிர்ந்து கொள்கிறார்.

1960 களில் ஆற்றல் மிக்க இளம் எழுத்தாளனாக உருவெடுத்து தமிழுலகம் நன்கு அறிந்த சிறந்ததோர் படைப்பாளியாக வாழ்ந்தவர் செ.யோகநாதன். அவரை உருவாக்கிய பெருமை பேராதனைப் பல்கலைகழகத்திற்கே பெரிதும் உரியது. பல்கலைக்கழகத்தில் இருந்த போது பல்கலைக்கழக வெளியீடாக வந்த கதைப் பூங்கா, விண்ணும் மண்ணும், காலத்தின் குரல்கள், யுகம் ஆகிய சிறுகதைத் தொகுதிகளில் அவரின் கதைகள் வெளிவந்திருந்தன. யோகநாதனின் சிறுகதைத் தொகுதி பேராதனைப் பலகலைகழகத்தில் 1964 ஆம் ஆண்டு அவர் மாணவ நிலையில் இருந்தபோதே வெளிவந்தது. பேராதனைப் பல்கலைக்கழகம் 1960 - 1964 களில் வெளிக்கொணர்ந்த முக்கிய படைப்பாளிகளில் யோகநாதனும் ஒருவர் என்பதை எவரும் மறுக்க முடியாது. அவர் பல்கலைக்கழகத்திலே இருந்த போது 'வசந்தம்' என்றொரு பத்திரிகையை தனது மாணவ காலத்திலே நடத்தியவர். ஈழத்து சஞ்சிகை வரலாற்றில் அவரின் இந்த 'வசந்தம்' என்ற சஞ்சிகை முக்கிய இடத்தைப் பெறுகிறது.

1962 இல் தான் யோகநாதனின் முதல் சிறுகதையான 'மனக்கோலம்' கலைச் செல்வி சஞ்சிகையிலே பிரசுரமாகியது என நான் நினைக்கிறேன். கலைச்செல்வி கந்தரோடையில் சிற்பி சரவணபவன் அவர்களால் நடத்தப்பட்ட ஒரு இலக்கிய சஞ்சிகையாகும். அதனை அடுத்து சோளகம், வடு, கலைஞன், மலரும் கொடியும், நிறங்கள், புதிய நட்சத்திரம் போன்ற சிறுகதைகள் அவராலே படைக்கப் பட்டன. யோகநாதனின் சிறுகதைகள் வெளிவராத ஈழத்து பத்திரிகைகளும் கிடையாது, தமிழக பத்திரிகைகளும் கிடையாது என்றே சொல்ல வேண்டும்.

யோகநாதன் அவர்கள் ஆரம்பத்திலே இன உணர்வு, மொழியுணர்வு மிக்கவராக தமிழரசுக் கட்சியின் பால் கவரப் பட்டவராக இருந்தவர். தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்கு இரத்தப் பொட்டு வைத்த தொண்டராகவும் அவர் இருந்திருக்கின்றார். ஆனால் பின்னர் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் ஈடுபடத் தொடங்கியதும் ஒரு மார்க்சிய முற்போக்குவாதியாகி தேசியம், மண்வாசனை, யதார்த்தம் ஆகியவற்றுக்கு உட்பட்டிருந்தார். அவர் மார்க்சிய முற்போக்குவாதியாக கடைசிவரை வாழ்ந்திருக்கின்றார். 1983 இலே தமிழ்த் தேசியவாதம் இவரின் கதைகளில் ஆழவே வேரூன்றி இருப்பதைக் காணலாம். இதில் மூன்று நிலை அவரிடம் இருந்திருக்கிறது. முதலில் சமஷ்டி நிலை, பிறகு கம்யூனிஷ்ட் கட்சி முற்போக்கு எழுத்தாளராக பிற்காலத்திலே தமிழ்த்தேசியம் இவரின் கதைகளில் ஆழவே வேரூன்றி இருப்பதை நாம் காண்கிறோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசிய உணர்வுக் காலகட்டத்தில் ஈழத்து சிறுகதை உலகிற்கு காத்திரமான பங்களிப்பாக அமைவன யோகநாதனின் கதைகளாகும். ஈழத்து வாழ்க்கைப் பிரச்சனைகளின் மையங்களை இனங்கண்டு வார்த்தைகளில் உணர்வோடு அவற்றைப் பதிய வைத்திருக்கிறார்.

தமிழக பத்திரிகைகளில் தனது படைப்புக்களால் அரசோச்சிய காலத்தில் எழுதிய "என்று தணியும்' "அகதி" "வீழ்வேன் என நினைத்தாயோ' "அன்னையின் குரல்" 'தேடுதல்' "சரணாலாவும் சின்னக் குட்டியும்" "இன்னொரு மனிதன்" "அவர்களின் மகன்" "அடிமைகள் இல்லாத இடத்தில்", "பூ முதிரை" முதலான சிறுகதைகளைப் படைத்தார். அச்சிறுகதைகளில் சிருஷ்டிகர்த்தாவாக, இந்திய அமைதி காக்கும் படை நடத்திய நடவடிக்கைகளையும், இலங்கை இராணுவத்தின் அட்டூழியங்களையும், எம்மவரின் தியாகங்களையும், அரச பயங்கரவாத போக்குகளையும், தமிழ் மக்களின் அகதி வாழ்வின் அவலங்களையும், இன ஒடுக்கல் நடவடிக்கைகளையும், சாதிப் பிரச்சனைகளையும் உள்ளடக்கிக் காட்டினார்.

அவர் இலங்கை நிர்வாக சேவையிலே சேர்ந்து உதவி அரசாங்க அதிபராக பூநகரியில் கடமையாற்றியவர். பிறகு தமிழகம் சென்று குறைந்தது 10 வருடங்கள் இருந்தவர். தமிழகத்திலே அவர் எழுதாத பத்திரிகைகளே கிடையாது. எழுத்தாளர் அமரர் தி. ஜானகிராமன் அவர்கள் நினைவாக கணையாழி பத்திரிகை நடத்திய குறுநாவல் போட்டிக்காக "இரவல் தாய்நாடு" என்ற படைப்பை எழுதினார். உண்மையிலேயே தமிழ் எழுத்துலகில் அற்புதமான குறு நாவல் அது. அதற்குப் பிறகுதான் தமிழகமே விழித்துக் கொண்டு ஓர் அற்புதமான படைப்பாளி இலங்கையிலிருந்து தமிழகம் வந்து தம்மிடையே இருக்கிறார் என்பதை புரிந்து கொண்டது. அவர் படைத்த "இரவல் தாய்நாடு' குறு நாவலை படித்து விட்டுத்தான் கலைஞர் கருணாநிதி கூட அவரோடு தொடர்பு கொண்டார். கலைஞர் கருணாநிதி எழுதிய "பாயும் புலி பண்டாரக வன்னியன்" என்ற கதையைக்குத் தேவையான ஆவணங்களை யோகநாதன்தான் எடுத்துக் கொடுத்தார் என்பது அவர் எழுதிய கடிதத்திலிருந்து புரியக் கூடியதாயிருக்கின்றது. பாயும் புலி பண்டாரக வன்னியன் என்ற ஒரு அற்புதமான நாவல் உருப் பெறுவதற்கு யோகநாதனே மூலகாரணமாக இருந்திருக்கின்றார்.

யோகநாதன் எழுதி இந்தியாவில் வெளிவந்த "கண்ணீர் விட்டோ வளர்த்தோம்" என்பது மிக முக்கியமான சிறுகதைத் தொகுதி.

ஈழத்து சிறுகதைத்துறையிலே செ.யோகநாதனின் பாரிய பங்களிப்பாக விளங்குவது அவர் தமிழகத்திலே வாழ்ந்த காலத்தில் இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைகள் என்ற இரண்டு பெரிய சிறுகதைத் தொகுதிகளை ஈழத்தின் பலதரப் பட்ட எழுத்தாளர்களின் சிறுகதைகளைக் கொண்டு வெளியிட்டமைதான். 1000 பக்கங்களுக்கு மேல் இரண்டு பெரிய சிறுகதைத் தொகுதிகளாக அவற்றை வெளியிட்டு ஈழத்திலே மறைந்து கிடந்த எழுத்துலகச் சிற்பிகளையெல்லாம் அறிமுகப் படுத்தினார். "வெள்ளிப் பாதசரம்" , "ஒரு கூடைக்கொழுந்து" ஆகிய இவ்விரண்டு தொகுதிகள் மூலம் ஈழத்தைச் சேர்ந்த குறைந்தது ஐம்பது எழுத்தாளர்களையாவது அவர் மீள் அறிமுகம் செய்திருக்கிறார். இதன் மூலம் ஒரு சிறந்த படைப்பாளியாக அவர் செயற்பட்டிருக்கின்றார் என்றே நான் சொல்லுவேன்.

'ஒளி நமக்கு வேண்டும்' என்ற சிறுகதைத் தொகுதிக்காக இலங்கை சாஹித்திய மண்டலப் பரிசைப் பெற்றவர். இந்த நூல் யுனெஸ்கோ மொழிகளிலே மொழி பெயர்க்கப் பட்டது. சிரித்திரன் நடத்திய போட்டியில் 'காவித்தின் மறுபக்கம்' என்ற குறு நாவலுக்காக முதற் பரிசினைப் பெற்றவர். யோகநாதனின் குறு நாவல்கள் நவீன இலக்கியத்துக்கு வழங்கிய சேவை முக்கியமானது. "இரவல் தாய்நாடு" , "கனவுகள் ஆயிரம்" , "காணி நிலம் வேண்டும்" , "தலைவர்கள்" , "கேட்டிருப்பாய் காற்றே" , "சுந்தரியின் முகங்கள்", இனி வரும் வசந்தங்கள்" இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். அவர் நிறைவாக எழுத விரும்பியது "நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே" என்ற நாவல். ஈழத்து தமிழர்களின் பிரச்சனைகளை முழுமையாக நாவலாக்க விரும்பினார், அதன் முதல் தொகுதி மட்டுமே வெளிவந்தது. மிகுதியும் வெளிவர அவர் விரும்பினார், தமிழர் பிரச்சனையை ஆரம்பத்திலிருந்தே முழுமையாக தர விரும்பிய அவர் எண்ணம் ஈடேறவில்லை.

கடைசிக் காலத்தில் அவர் யாழ்ப்பாணத்தில் எம்மோடு இருந்தார். ஒரு முற்போக்குவாதியாக முற்போக்கு சிந்தனையாளராக கடைசிவரை வாழ்ந்து ஒரு நிறை வாழ்வை முடித்திருக்கிறார் என்றே நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாதுகாப்பு

உடலில் பட்ட ரணங்கள் ஆறுமுன்னே
ஆழக்கோடுகள் அதன்மேல் கிழித்து
கூராய்ச் செதுக்கிய கதிகால்களை நட
படுநேராய் எழுகிறது வேலிகள்.

தோல் மினுத்துமினுத்துச் செழிக்க
மார்பின் பருக்கைகள் திரட்சிகளாகும் போது
சோடிக் கண்களால் உன்னை மேய்ந்தபடி
அவை கூடாரம் அமைத்துக் காத்திருக்கின்றன.

பருவகால மாற்றமதில்
மாரித்தவக்கைகளும் மயிர்க்கொட்டிகளும்
வந்துபோய்க் கொண்டிருக்க,
கொலைஞன் ஒருவனின் கூர்க்கத்தி முனையைப் போல்
வளரும் எட்டுவாரக் கரு உருவில்
வயிற்றின் கொழகொழத்த சதை இடுக்குகளுள்
புகுந்தபடி
சொகுசின் கணச்சூட்டில்
வேலிகள் ஆழமாய்ப்
புதைந்து பதிகின்றன.

அருகில் ஆங்காங்கே
இன்னமும் வேலிகள்
வெளிர் பச்சையாய் முளைவிட்டு கிளம்பியபடி
வழிபாதை நெடுகிலும் சாரிசாரியாய்ச்
சாரிசாரியாய்.....
உன் கண்பாப்பாக்கள் சலித்துக் குறுகி இருளும் வண்ணம்
மனம் எட்டும் பரப்பெங்கும் விரிந்து கிடக்கின்றன.

நீ நினைத்திருக்கலாம் அவை தாண்டுவதற்கென்று.

அவை காத்திருக்கின்றன
தோல் கூடாரத்தினுள்.
சிறுகச் சிறுக அரித்து அறியாக்கணத்தில்
உன்னுள் புகுந்து
முழுதாய் விழுங்கி ஏப்பம் விடுவதற்காகவே.

ஆழியாள்
நன்றி : உயிர்நிழல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பது ரூபாய் நோட்டு

அஜயன் பாலா

பொங்கல் தினத்தன்று இரவு ரூபவாகினியின் நேத்திரா தமிழ் சேவையில் ஒன்பது ரூபா நோட்டு படம் ஒளிபரப்பாகியது. தூர்தர்ஷனில் போடத்தான் இது லாயக்கு என்று யாரோ தமிழகத்தில் விமர்சித்தது நினைவில் வந்-தாலும் பார்க்க வேண்டும் போலப்பட்டது. பார்த்தேன்.

யதார்த்தபூர்வமாக எடுக்கப்படும் படங்கள் வசூலில் சாதனை செய்யும் என்று நம்பி தங்கர் பச்சான் இந்தப் படத்தையும் எடுத்திருக்கிறார். ஆனால் அவருடைய நம்பிக்கை ஏன் பொய்த்-துப் போனது என்பதன் காரணத்தை படத்தைப் பார்த்ததும் எனக்கு விளங்கியது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யதார்த்தமாக படம் இருக்கலாம், ஆனால் அதற்காக ஒரே களேபரமாக இருக்க தேவையில்லை. கதாபாத்திரங்கள் எல்லாம் ஒரு சேரக் கதைப்பதால் அப்படிச் சொல்லுவதைவிட கத்திக் குளறுவதனால், பல இடங்களில் வசனங்கள் விளங்கவில்லை. படம் ஆரம்பித்து அரைவாசி நேரத்துக்கு யார் யாருக்கு என்ன சொந்தம் என்கின்ற ஆராய்ச்சியிலேயே நேரம் கழிந்தது. ஒவ்வொரு காட்சிகளும் ஒழுங்கின்றி மாறிமாறி வருவதால் மேலும் குழப்பங்கள். யதார்த்தபூர்வமான படங்களும்கூட அழகியலும் ஒரு சுத்தமான திரைக்கதை வசனமும் அமையவேண்டும் என்கின்ற நிபந்தனையை தங்கர் மறந்து விட்டார். Untidy script என்றுதான் அதைக் கூற வேண்டும்.

யாருக்கும் உதவி செய்யும் பரந்த மனசுள்ள குடும்பத் தலைவன் மாதவராக சத்தியராஜ். அவருடன் மாடாக உழைத்துக் குடும்பம் நடத்தும் மனைவியாக அர்ச்சனா. பிள்ளைகளைப் பெத்தாக் கோவணந்தான் மிஞ்சும் என்ற சித்தாந்தமே படம் முழுவதும் விரவி நிற்கின்றது. இத்தனை பிள்ளைகள் இருந்தும், எத்தனை என்று கேட்காதீர்கள் அது எங்களுக்கு சரியாகத் தெரியாது, ஒருவர் கூடவா அப்பா அம்மாவுக்கு ஆதரவாக இல்லை என்று எம்மைக் கேட்க வைக்கும் அளவுக்கு கதாபாத்திரங்களின் உருவாக்கம் அமையவில்லை. சம்பவக் கோர்வைகளும்



கிட்டதட்ட அப்படித்தான். மனம் வெறுத்து வீட்டை விட்டு வெளியேறிய அப்பாவும் அம்மாவும் தங்களுடைய நீண்ட கால சிநேகிதன் பாய் வீட்டில்தான் ஒண்டியிருப்பார்கள் என்று பிள்ளைகள் கண்டுபிடிக்க ஆறு வருஷங்களாம்!! தங்கர் எங்களை வைத்து காமெடி கீமடி பண்ணியிருக்கிறார் அவ்வளவுதான்.

உண்மையில் பிள்ளைகளின் பக்கக் கதை படத்தில் காட்டப்படவில்லை. ஊரெல்லாம் பாசத்துடன் மதிக்கின்ற பெற்றாரை அவர்கள் எப்படிப் பார்த்தார்கள் என்று எங்களுக்கு சொல்லப்படவில்லை. 'நீங்கள் போனால்தான் நாங்க நல்லா வாழ முடியும்' என்று கோபத்தில் பிள்ளைகள் கத்த, தனது ஒரு மகன் தாழ் குலப் பெண்ணை நேசிக்கிறான் என்ற மனவருத்தமும் சேர, ஆங்காரத்தில் தான் நேசித்த ஊர் தனது சொந்தங்கள் எல்லாவற்றையும் உதறிவிட்டுக் கிளம்புகிறார் அப்பா.

அப்படிப் போனாலும் பரவாயில்லை. 'பிள்ளைகளையும் சொந்த பந்தங்களையும் உதறிவிட்டு உனக்கு வரச் சம்மதமா?' என்று ஒரு வார்த்தை கேட்காமல் அந்த அப்பாவி அம்மாவையும் கூட்டிப்போகிறார். ஒரு பெண்ணுக்கு தனது அந்தரங்கத்தின் பாதுகாவலாக, தான் வளர்த்த உறவுகளின் ஊற்றுமுனையாக இருப்பது அவளுடைய வீடு . அந்த வீட்டிலிருந்து அவளைப் பிடுங்கி எடுக்கிறார். வாயில்லாப் பூச்சிகளாக தமது மனைவியரைப் பாவிக்கும் கணவன்மாரை எங்கள் தமிழ்ப் படங்களில் பார்த்துப் பார்த்துப் புளித்துப் போய்விட்டது. இப்படித்தான் தன்னுடைய பிள்ளைகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் உணர்வுகளையும் 'மாதவர்' மதிக்காமல் நடந்திருப்பார் என்று நினைக்கும்போது, பிள்ளைகள் செய்வது சரியென்றே முடிவு செய்கின்றோம். மொத்தத்தில் தங்கர் செதுக்கிச் செதுக்கி உருவாக்கிய பிரதான கதாபாத்திரமான மாதவர் எங்கள் அனுதாபத்தை இழந்து நிற்கிறார். குடும்பத்தைக் கலைக்கும் வில்லன் தண்டாயுதபாணி பாத்திரமும் வெறும் சொத சொத. அப்படியென்றால், படத்தில் வேறென்னதான் மிஞ்சுகிறது?

நல்ல தத்ரூபமான நடிப்பு மிஞ்சுகிறது. அர்ச்சனாவின் ஆழமான நடிப்பை ரசிக்க முடியாத காட்சிகளே இல்லை என்று கூறலாம். விடியற்காலை தூக்கத்திலிருந்து எழும்பி கணவன் தன்னை வீட்டை விட்டுக் கூட்டிச் செல்லும்போது பாசமும் சோகமுமாய் தாங்கள் கட்டிய வீட்டின் ஒவ்வொரு தூணையும் அவர் தடவிக் கொடுக்கின்ற முறை. ஊரையும் பிள்ளைகளையும் விட்டு வந்த தவிப்பு இருந்தும் வீம்பில் திரும்பப் போகாமல் கணவன் இருப்பதைப் பார்த்து தனது ஆற்றாமையை அழுது அரற்றி வெளிப்படுத்தும் தன்மை. நிலபுலன்கள் சொத்து சுகங்களையெல்லாம் விட்டு வந்து ஆடுகள் மேய்த்துச் சாப்பிடும் பொறுமை. எல்லாமே அற்புதம். இவரை தமிழ்ப்படவுலகம் சரியாகப் பார்க்கவில்லையே என்று கசிகின்றோம். நாசரும் ரோகிணியும் பாய் ஆகவும் அவர் மனைவி கமீலாகவும் கண்ணியமாக வந்து போகிறார்கள்.

பரத்வாஜின் இசை நினைவில் நிற்கவில்லை. ஒளிப்பதிவும் சொல்லிக் கொள்கின்ற மாதிரி இல்லை. சம்பவங்களை கோர்ப்பதில் சேரனிடமிருந்தும், பாத்திர வடிவமைப்பிற்கு பாலாவிடமிருந்தும், அழகியலைச் சேர்ப்பதில் கமலிடமிருந்தும் தங்கர் பச்சான் கொஞ்சம் கற்றுக் கொண்டு அடுத்த பட இயக்கத்தில் ஈடுபடுவது நன்மை பயக்கும். ஒன்பது ரூபாய் நோட்டு எங்கும் பார்க்க முடியாத அபூர்வம்தான், ஆனால் கசங்கியது.

பலஸ்தீனத்தின் மண்ணிழப்பு 1946 முதல் 2000 வரை

சரித்திரம் தேர்ச்சி கொள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வாழ்வதா அன்றி மாழ்வதா?

வாழ்வதா நாம் ? அன்றி
வயிற்றிற்கு உணவின்றி
மாழ்வதா ? என்பதுவே
மனிதனது வினாவின்று

கேட்பாருமில்லை இதை
கண்கொண்டு பார்க்கின்ற
ஆட்களுமே தானில்லை
அழகான இந்நாட்டில்

மாவுக்கும் விலை,அரிசி,
மழலை தம்முணவாம் பால்
மாவுக்கும் விலையென்றால்
மக்கள் நிலை என்னாகும்

உடுதுணியும் பயறுமுழுந்து
உப உணவும் விலையென்றால்
படுதுயரம் கொண்டு சனம்
பரிதவிக்கும் நிலை காணீர்

மசகெண்ணெய் விலை உயர
மறு பொருளின் விலை உயரும்
பிறகென்ன அரசே உன்
பசப்பு வார்த்தை பிழையே

இருக்கின்றோம் இங்கே நாம்
இயலாத நடைப் பிணமாய்
'இருக்கிறம்' நீயாவதிதை
இயம்பிடுபோய் அரசுக்கு.

கா. சிவலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கணனிவலைக் களவுப் பக்கங்கள்

ஏதோ எங்களால முடிஞ்சது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசி யோசி நேசி 3

'நிலக்கிளி' பாலமனோகரனுடனான பேட்டி

பேட்டி கண்டவர் கானா. பிரபா (அவுஸ்திரேலியா)

கானா.பிரபா: நாவல்கள் சிறுகதைகள் உள்ளிட்ட உங்கள் எழுத்துத்துறை தவிர ஓவியம், மொழிபெயர்ப்புத் துறையிலும் தடம் பதித்திருக்கிறீர்கள். மொழிபெயர்ப்பு பற்றிச் சொல்லும்போது டெனிஷ் மொழியில் வெளி வந்துள்ள பல ஆக்களையும் வெளியிட்டிருக்கிறீர்கள். அந்த அனுபவங்கள் குறித்து?

பாலமனோகரன்: டெனிஷ் மற்றும் ஆங்கிலம் எனப் பல மொழியாக்கம் செய்திருக்கிறேன். ஆனால் இவை எல்லாவற்றையும் விட என்னுடைய வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த பெரிய அதிர்ஷ்டமாக கலாநிதி குணசிங்கம் அவர்கள் தன்னுடைய கலாநிதி பட்டத்துக்காக எழுதிய 'தமிழ் தேசியவாதம்' என்ற நூலை தமிழாக்கம் செய்கின்ற வாய்ப்பு கிடைத்ததைக் குறிப்பிட்டுச்சொல்ல வேண்டும்.

காரணம், எங்களுடைய வரலாற்றுக்குரிய சான்றுகள் பல அந்நூலில் உள்ளன. கலாநிதி குண-சிங்கம் என்னிடம் அடிக்கடி சொல்-லுவார், "இலங்கைத் தமிழர்களுடைய வரலாற்றின் வெவ்வேறு காலகட்டங்களைக் குறிக்கின்ற நூல்கள்தான் இதுவரை வெளிவந்துள்ளன. இலங்கைத் தமிழர்களின் வரலாற்றை ஒரே நூலில் முழுமையாகவும் தகுந்த ஆதாரங்களுடன் சான்றுகளுடனும் சொல்கின்ற ஒரு ஆக்கம் நம்மிடையே இல்லை. அதை நான் கட்டாயம் உருவாக்க வேண்டும்' என்பார்.

இதை ஒருவித தியாக உணர்வுடன், தாகத்துடன் அவர் செய்து கொண்டிருந்தார். அவருக்கு சிறு உதவியாக என்னால் இருக்க முடிந்ததைப் பெரிய காரியமாக நினைக்கிறேன்.

கானா.பிரபா: இத்தகைய பெரிய பணிக்காக நீங்கள் செலவழிக்கும் நேரம் என்பது கூட மிக அதிகமாகவே இருந்திருக்கும் அல்லவா?

பாலமனோகரன்: உண்மைதான். நான் முறையான பட்டப் படிப்பு பெற்றவன் அல்ல. என்னுடைய அதிகபட்ச படிப்பு என்று பார்த்தால் ஆங்கில ஆசிரியராகப் பட்டம் பெற்றதுதான். அதைவிட இங்கே டென்மார்க்கில் கட்டிடத்துறையில் தொழில் நுட்பவியலாளருக்கான கற்கை நெறியாக மூன்று வருடப் படிப்பை முடித்திருக்கிறேன். என்னுடைய ஐம்பதாவது வயதில் அந்தப் பட்டப் படிப்பை முடித்தேன்.

என்னுடைய ஒரே ஆசை என்னவென்றால், என் தாய்நாட்டுக்குப் போகவேண்டும். அங்கு எவ்வளவோ கட்டிடங்கள் எழுப்பப்பட வேண்டிய நிலையில் உள்ளன. அதற்கு ஏதேனும் ஒருவகையில் உதவியாக இருக்கலாமே என்பதற்-காகவே படித்தேன்.

கானா.பிரபா: ஓவியத்திலும் நீங்கள் கைதேர்ந்த கலைஞராக இருக்கிறீர்களே... எப்படி?

பாலமனோகரன்: டென்மார்க்கில் என் ஓவியங்களை டெனிஷ் மக்கள் ஓரளவு விரும்பிப் பார்த்து ரசித்திருக்கிறார்கள். சிலர் தங்களுடைய வீடுகளிலும் அவற்றை வைத்துள்ளனர். ஆனால் இந்த விதயத்தில் எங்கள் மக்கள் மத்தியிலும் எனக்கு ஒரு இடம் கிடைத்திருக்கிறது என்றால், அதற்காக நான் திரு. கி.பி. அரவிந்தன் அவர்களுக்குதான் நன்றி சொல்ல வேண்டும். நான் ஓவியம் வரைவேன் என்பது எம் மக்களுக்குத் தெரியவந்தது அவரால்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அப்பால் தமிழ்' தளத்தில் ஓவியகூடம் என்று ஒரு பகுதியை ஆரம்பித்து அதிலே என்னுடைய ஓவியங்களை மட்டுமல்ல ஈழத்து ஓவியர்களின் படைப்புகளையும் அளித்வர் அவர். அதிலே என்னுடைய ஓவியங்களும் உள்ளன.

நான் ஒன்றும் முறையாக ஓவியம் கற்றுக் கொள்ளவில்லை. சுயமாகத்தான் வரையத் தொடங்கினேன். இப்போது அதில் ஈடுபட்டு வருகிறேன். சித்திரமும் கைப்பழக்கம் என்பதுபோல நான் சுயமாக கற்றுக் கொண்ட நல்ல விஷயமாகவே ஓவியம் எனக்கு இருக்கிறது.

கானா.பிரபா: உங்களது இளம் பருவ கால ஓவிய முயற்சிகள் ஏதாவது?

பாலமனோகரன்: என்னுடைய தாயார் தான் எனக்கு சிறு வயதில் ஆசிரியையாக இருந்தவர். மூன்றாம் வகுப்பு மட்டும் தண்ணீரூற்று சைவ பாடசாலையில் படித்தேன். அங்குதான் என் தாயார் பணியாற்றினார். அவரை பெரியம்மா வாத்தியார் என்று சொல்வார்கள். அதன் பிறகு உடுவில் மகளிர் கல்லூரியில் படித்தேன்.

மிக சின்ன வயதிலேயே என்னை என் தாயார் பெரிய வகுப்பு மாணவர்கள் ஓவியம் வரையும்போது அங்கு அழைத்துச் சென்று அவர்களுடன் ஓவியம் வரைய விடுவார்.

(அ. பாலமனோகரனால் 1994 இல் வரையப்பட்ட "காட்டுக் கோழிகளின் சண்டை", இது Amateur Art Scene வெளியிடும் Paint சஞ்சிகையில் வெளிவந்தது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் காரணமாகவோ என்னவோ ஓவியம் பழகிவிட்டது. எழுத்துத் துறையில் ஒரு ஓவியரின் கண்ணோட்டத்துடன் சில விஷயங்களைப் பார்க்கும்போது அது எங்களுடைய எழுத்துக்கு அழகும் மெருகும் சேர்ப்பதை என்னால் உணரமுடிகிறது.

கானா.பிரபா: வன்னி மண் மாந்தர்கள், அதாவது உங்கள் காலகட்டத்திலேயே வாழ்ந்தவர்கள் பின்னர் கதை மாந்தர்களாக கருதப்பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இன்றைய காலகட்டத்தில் வன்னி மண்ணின் முக்கியத்துவம் கருதி நமது தேசிய போராட்டம் கருதி அதாவது வன்னி மண்ணிலிருந்து அதிகமான படைப்பிலக்கியங்கள் வெளிவராமல் இருந்ததற்கு குறிப்பிட்ட காரணம் ஏதாவது உண்டா?

பாலமனோகரன்: எங்களுடைய விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலத்துக்குப் பிறகு வன்னியில் ஒரு புது வெள்ளம் அல்லது புது ரத்தம் பாய்ந்தது போன்ற நிலைமை ஏற்பட்டது. 84 ஆம் ஆண்டு டென்மார்க் வந்து , பத்து வருடங்களுக்குப் பின்னர் முதன்முதலாக அங்கு சென்றபோது, வன்னி மண்ணையும் சரி, மக்களையும் சரி முன்பிருந்த வகையில் என்னால் காண முடியவில்லை.

அடுத்த இதழில் நிறைவுறும்...

காதலி: உங்களுக்கு
எப்பவும்
திக்குமா?

காதலன்: இல்லை!
கதைக்கும்போது
மட்டும்



பட்சமுள்ள ஆச்சி அறிவது,புது வருசம் பிறந்திட்டுது. தைதானே எங்களுக்குப் புது வருசம். அது தானே சொல்லுறவை.தை பிறந்தால் வழி பிறக்கும் எண்டு. உப்பிடி எத்தனை வருசமாய் சொல்லிப் போட்டினம். ஆனால் எங்களுக்குத் தான் ஒண்டையும் காணன். அப்பு நல்ல நம்பிக்கையோடை இருக்கு. தனக்கு கனடாவுக்குப் போறதுக்கு வழி பிறக்கும் எண்டு. இப்ப கொஞ்சத்துக்கு முன்னை சொல்லிப் போட்டு சந்தைக்கு வாழைக்குலை கொண்டு போறார். வளவுக்கை நிக்கிற வாழைகளிலை ஒரு இதரக் குலை பொங்கலுக்குக்கெண்டு விட்டிருந்தார். பொங்கலுக்கு இரண்டு நாள் இருக்கேக்கை புகை போட்ட படியால பொங்கலண்டு நல்லாய்ப் பழுத்திருந்தது. இப்பயெல்லே காபைட் போடினம். முந்திப் புகைதானே. வாழைக் குலைக்கு புகை போடுறது எனக்கு நல்ல விருப்பம்.

அப்பு சந்தையால வரக்கை புதுக் கலண்டரும், பஞ்சாங்கமும் வாங்கி வந்தார். சித்திரையும் வருஷப்பிறப்பு எண்ணினம்,பிறகு ஜனவரி ஒண்டையும் வருஷப்பிறப்பு எண்ணினம்.உண்மையான தமிழருடைய வருஷப்பிறப்பு தைப்பொங்கல் அண்டைக்குத்தான். அதால தோட்டக்காரர் பொங்கலைத்தான் வருஷமெண்டு கொண்டாடினம். அவை சொல்லுறது எல்லாம் சரியாய் இருக்கும். எங்களின்ர தமிழை ஆர் ஆரோ வளர்த்தது எண்டு சொல்லினம். அது எல்லாம் பிழை. தமிழ் வளர்த்தது எண்டால் யாழ்ப்பாணச் சுருட்டுத் தொழிலாளராள தாம். அவர்கள் கொழும்புக்கு அனுப்புற தங்களுடைய சுருட்டுப் பெட்டி விலாசங்களை தமிழிலைதான் இண்டைக்கும் எழுதுகினம். அவைக்கு நாங்கள் தலை வணங்க-வேணும். பொங்கலோடை அவைக்கு பாராட்டும் தெரிவிச்சு, சீனவெடியும் கொழுத்தினம்.

கொழும்புக்குப் போனாலும் வேட்டியும் சால்வையும் தான். களுத்துறைக்குப் போனாலும் வேட்டியும் சால்வையும்தான்.தமிழிலை பேசி அலுவலை முடிக்கினம். கனகலிங்கத்தையும், 'வை.சி.கு'வையும் ஆருக்குத் தெரியாது. அவை சுருட்டுக்களை நுல் வெட்டி கட்டி அடுக்கிறது. இப்ப உள்ள மெசின்களே செய்யாது. யப்பானிலிருந்து அந்தமான் தீவுவரை அவைக்கு அரசியல் அத்துப்படி.

என்ரை மனுசி பொங்கலுக்கு அடுப்பு இரண்டு மாசத்துக்கு முன்னமே பிடிச்சு, சாணகத்தாலை எல்லாம் மெழுகி கோர்க்காலிக்குக் கீழை பக்குவமாய் வச்சிருந்தா. தென்னம் பாழையும், வேம்பு தறிச்ச விறகுகளும் எல்லாம் றெடி. மழையும் ஓஞ்சு கொண்டு வருகுது. பொங்கலுக்கு நல்லாய் வெளிச்சிடும். தையிலைதான் சூரியன்ரை சிரிப்பைக் காணலாம். நெல்லுக்குத்தி, பச்சை அரிசியெல்லாம் தீட்டி மூடல் பெட்டிலை போட்டு வச்சிருந்தா. என்ர மனிசி கோமதியும் ஒரு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தோட்டக்காரன்ர மகள்தானே? அவர் விவசாய மன்னன் என்று பட்டம் எடுக்கேல்லையே ஒழிய, விவசாய மன்னன்தான்.பொங்கல் ஒரு வழியா சிறப்பா நடந்ததனை.

கோமதியின்ர மாமி கனடாவிலை. மாமாவும் போறத்துக்கு ஆயத்தப்படுத்துகிறார். தானும் மனுசனையும் இழுத்தக் கொண்டு கனடாவுக்குப் போகலாம் எண்டு நினைக்கிறா போலை. உவவின்ரை நினைப்பும் நிறைவேறுமே?

ஆச்சி, உங்கை பொங்கல் எல்லாம் என்ன மாதிரி? வீட்டுக்குள்ள காஸ் அடுப்பிலை யன்னல் ஓரத்திலை வச்சுத்தானே பொங்கினனி. இப்ப அங்கை பனி கொட்டுதாம். சூரியனை என்னண்டு பார்த்துக் கும்பிட்டாய்? கிழக்கு மேற்குத் தெரியாத ஊரனை அது. எப்பிடி எண்டாலும் கை நிறையக் காசு வரும். அதுதான் சனம் அங்கை இருக்கிதுகள்.

இஞ்சையும் என்ணணை வாழுது. இஞ்சையும் குக்கரிலை பொங்கிறவை கனபேர். தோட்டக்காரர் பொங்கிற பொங்கலை தோட்டத்திற்குள்ளை காலே வைக்காதவை எல்லாரும் பொங்குகினம். இந்தியாவின்ரை பானை, சீனாவின்ரைஅரிசி, கியுபாவின்ர் சக்கரை இதுவும் ஒரு பொங்கலே? எங்கன்ரை குயவனிடம் நெல்லுக்குக் கொடுத்து வாங்கின பானை எங்கட மண்ணிலை விளைஞ்ச அரிசி, எங்கன்ரை கொல்லையிலே நிற்கிற பசுவில கறந்த பால்,மஞ்சள், எங்கன்ர தோட்டத்தில விளைஞ்ச கரும்பு,மஞ்சள், மாவிலை, தோரணம், பூக்கள் இதோடை பொங்கிற பொங்கல்தான் பொங்கல் அதுதான் தைபொங்கல். எங்கன்ரை பொங்கல் அபிடித்தான் நடந்தது.

நாங்கள் பொங்கலுக்கு ஆயத்தப் படுத்தேக்க. அப்பு பட்டிப் பொங்கலுக்கு ஆயித்தப்படுத்திச்சது. நாம்பன்களுக்கெல்லாம் கொம்பு சீவி பெயின்ட் அடிச்சார். ஒரு மாசமாய் இரவு பகலாய் மாட்டுக் கொட்டிலுக்கைதான் . மாட்டுப் பொங்கல் முடிஞ்ச பிறகும் ஆள் அங்கைதான்.

கோமதி மார்கழியிலிருந்து பொங்கல் வரைக்கும் வீட்டு முற்றத்திலை விதம் விதமாய்க் கோலம் போடும். பூசனிப்பூ புடுங்கிக் கொண்டு வந்து வைப்பா. அண்டைக்கொரு நாள் அப்பு சத்தம் போட்டதோடை பூசனிப் பூவை விட்டிட்டு, பிறகு செம்பருத்தம் பூத்தான். பூசனிப்பூ ஒண்டு புடுங்கினால் அப்பு ஒரு பூசனிக்காய் புடுங்கின மாதிரி நிண்டு குதிக்கும். கனடாவிலேயும் கோலம் போடுறனியே? உந்தக் குளிருக்கை எண்ணெண்டு சீவிக்கிறனி. இஞ்சையும் இப்ப நல்ல பனி, அது இப்பவே தொடங்கி நல்லாய் மூசிப் பெய்யுது. அப்பு விடியப்புறம் ஐஞ்சு மணிக்கு முன்னமே எழும்பி, சுறுட்டும் பத்தவைச்சுக் கொண்டு மாட்டுக் கொட்டிலுக்குள்ளைதான் அலுவல்.

எங்களின்ரை ஆட்களுக்கு இப்ப மனநிலை அவ்வளவு சந்தோசமில்லை. சனம் எல்லாம் இடம்பெயர்ந்து தாய் ஒரு இடத்திலை தகப்பன் இன்னொரு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இடத்திலை பிள்ளையள் வேறை இடத்திலை எண்டு கிடக்குதுகள். இந்த லட்சணத்திலை என்ன பொங்கல். கன சனம் அகதிமுகாமிலை, இந்தியாவிலை கொஞ்சச் சனம், கடலிலை பெரிய அமிலோதிப்பட்டுச் செத்ததது கொஞ்சம், போனது கொஞ்சம் எண்டு எல்லாம் பரதேசங்களுக்கும், பரலோகத்துக்கும் போயிருக்குதுகள்.

முந்திப் பொங்கலுக்கு அடுத்த வீட்டுக்காறருக்குக் கொடுத்து அவை தாறதை நாங்கள் வாங்கி, இப்பிடி எத்தனை நினைவுகள். அவை வெள்ளைப் பொங்கலும் மட்டுவில் முட்டிக் கத்தரிக்காய்க் கறியும் தருவினம். நாங்கள் அவைக்கு சக்கரைப் பொங்கல் குடுப்பம். இப்ப பக்கத்து வீட்டிலை இடம் பெயர்ந்த வேறு ஊர்க்காரர் இருக்கினம். அவைக்கு எங்களைத் தெரியாது எங்களுக்கு அவையைத் தெரியாது. எல்லாம் தலைகீழ்.

ஆச்சி! அப்புவை நீ என்னண்டு குறை சொன்னாலும் அப்புவின்ரை மனம் நல்ல மனம். நாங்கள் மனுசரைப் பற்றியும் அவயின்ரை பொங்கலைப் பற்றியும் கவலைப்படுறம். அப்பு மாடுகளைப் பற்றியும் அதுகள் எங்களுக்கு உழைக்கிறதைப் பற்றியும் கவலைப் படுறார். நாங்கள் சுக தேகிகளாக வாழ அதுகள் தங்களுடைய இரத்தத்தைப் பாலாக்கி தாறதைப் பற்றியும்தான் அப்பு எப்பயும் கதைக்கும். வீட்டுக் காவலுக்கு நிக்கிற அந்த நாலு கால் சீவன் வீமனிட்ட அப்பு காட்டிற பாசமும் அது அவரிட்ட காட்டிற நன்றியையும் நான் நினைச்சுப் பார்க்கிறன்.

போற போக்கைப் பார்த்தால் அப்பு ஆட்டுப் பொங்கலும் வைக்கும் போலை கிடக்கு. எல்லாச் சீவன்களையும் தென்னம் பொச்சுப் பிடிச்சு தேய்தேய் எண்டு தேச்சு குளிக்க வாத்து, எல்லாம் வெள்ளையாய் நிக்குதுகள்.

ஆச்சிஇப்ப எங்களுக்கு கப்பலிலை வந்தால்தானே சாப்பாடு. அதுவும் எங்களுக்கு நாட்டுக்கு ஒரு கப்பல், பிறகு ஊருக்கு வர இன்னுமொரு கப்பல். கப்பலிலை இருந்து வாய்க்கு. இதுதானே எங்களுக்க சுதந்திரம். இரண்டு கப்பலிலை ஒண்டுவராமல் போனாலும் எங்களுக்குப் பொங்கல் இல்லை.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் எண்டது பழைய கதை. எங்களை, தோட்டக்காரரை ஆர் மதிக்கினம். இப்ப உத்தியோகக்காறரைத் தானே மதிக்கினம். உழுதுண்டு வாழ்வாருக்கு ஒப்பில்லை யாம் எப்பவெண்டு தெரியுமே? ஆச்சி, கப்பல் வராமல் விட்டால் தான் எங்களைக் கவனிப்பினம். பொங்கிறதைவிட தண்டுறது லாபம். இது அப்புவின்ரை பொன்மொழி உங்கை

கனடாப் பொங்கலைப் பற்றி எனக்கெழுது.

பட்சமுள்ள

சண்ணுவத்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கேள்விகளின் புத்தகம்

ஏராளமான விமானங்கள் ஏன்
சொந்தக் குழந்தைகளைச் சுற்றி வட்டமிடுவதில்லை?

எந்த மஞ்சள் பறவை
அதன் கூட்டை எலுமிச்சைகளால் நிரப்புகிறது?

சூரியவெள்ளிச்சத்திலிருந்து தேனை உறிஞ்ச
அவர்கள் ஏன் ஹெலிகொப்டர்களைப் பழக்குவதில்லை?

பௌர்ணமி நிலவு அதன் மாவுச் சாக்கை
இன்றிரவு எங்கே விட்டுப்போகும்?

நன்றி: பாப்லோ நெரூதா கவிதைகள்
தமிழில் - சுகுமாரன்

மரணம் எனும்

நேற்று ஒருவர் இறந்து விட்டார். இன்று அவருடைய வீட்டில் இரங்கல் கூட்டம். என் பாலப் பருவத்தின் நினைவு மனதிலே ஓடுகிறது. முதன்முறை நான் சுடுகாட்டிற்குச் சென்றிருந்தேன். பிணம் எரிந்து கொண்டிருந்தது. மக்கள் சிறு சிறு வட்டமாக நின்று கொண்டு உரையாடலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். கிராமத்துக் கவிஞர் ஒருவன் கூறினான் ' நான் மரணத்தை பார்த்துப் பயப்படவில்லை. மரணம் என் சிநேகிதன்' இதனை பல காலங்களாகப் பலர் வாயிலாகக் கேட்டுக் கொண்டுதானிருக்கிறோம். இவ்வாறு வருபவர்களின் கண்களை நான் கூர்ந்து பார்த்து இருக்கிறேன். இவ்வாறான பேச்சுக்கள் பயம் மிகுதியின் காரணத்தால்தான் கிளம்புகிறது. மரணத்திற்கு நல்லதொரு பெயர் சூட்டுவதால் ஒன்றும் வேறுபாடு ஏற்படப்போவது இல்லை. உண்மையில் பயம் மரணத்துடையது அல்ல. அதனை அறியாமல் இருப்பதால் வருவது. ஞானமற்ற நிலையில்தான் பயம் ஏற்படுகிறது. மரணத்தைப் புரிந்து கொள்வது அவசியமானது. பரிச்சயம் பயமற்ற தன்மைக்குக் கொண்டு செல்கிறது. ஏன் தெரியுமா? பரிச்சயத்தால்' உள்ளதற்கு மரணமில்லை' என்கிற ஞானம் ஏற்பட்டு விடுகிறது.



சிநேகிதன்

ஆளுமையில் (Personality) இருந்தும் 'நான்' என்பதை அறிந்தோமோ அது விலகி விடுகிறது. அதற்கு தான் மரணம். அது உண்மையில் கிடையாது. அதனால் தான் அது அழிந்து போகிறது. அது வெறும் உடல் சம்பந்தப்பட்டது. சில தத்துவங்களின் இணைப்பானது. இணைப்பு நீங்கியதும் சிதறி விடுகிறது. அதுதான் மரணம். மனிதத்துவ உருவம் உள்ளவரை மரணமும் இருக்கத்தான் செய்யும். மனிதத்துவத்தில் ஆழ்ந்து இறங்குங்கள். சுயரூபத்தைக் கூர்ந்து நோக்குங்கள். அப்போது அமரத்துவம் கிடைத்து விடுகிறது. ஆளுமையிலிருந்து (Personality) சுயரூபத்திற்கு ஏற்கும் யாத்திரையே தற்சமம். சமாதி நிலையில் மரணத்தை அறிந்து கொள்ளமுடிகிறது. கதிரவன் உதித்தும் எவ்வாறு இருள் நிற்பதில்லையோ, அவ்வாறே சமாதிநிலை கிடைத்தும் மரணம் ஒதுங்கி விடுகிறது. மரணம் நண்பனும் அல்ல, விரோதியும் அல்ல. மரணம் என்பது கிடையவே கிடையாது. அதைக் கண்டு பயப்படத் தேவையுமில்லை. பயமின்றி இருக்கத் தேவையுமில்லை. அதை அறிந்து கொண்டால் போதுமானது. அதன் அறியாமை தான் பயம் எனப்படுவதாகும். அதன் ஞானமே பயத்தைப் போக்க கூடியது. ஒரு பிச்சைக்காரன் பிச்சை எடுக்கச் சென்றான். கிழவனாகி விட்டதால் அவன் பார்வையும் மங்கி விட்டது. அவன் ஆலயத்துக்கு முன் நின்று கூக்குரல் எழுப்பினான். யாரோ அவனை விரட்டி அடிக்க முனைந்தனர். 'இங்கே நிற்காதே. முன்னால் செல். உனக்கு ஏதேனும் பிச்சை போடத்தக்க ஒரு மனிதனின் வீடல்லஇது'. பிச்சைக்காரன் கேட்டான் 'அப்படியென்றால் இந்த வீட்டின் அதிபர் யார்? பிச்சைக்காரனுக்குப் பிச்சையும் போடாத அந்த ஆள் யார்?' அதற்கு அந்த மனிதன் கூறினான். பைத்தியக்காரா இது ஒரு ஆலயம் என்று உனக்குத் தெரியாதா? இந்த வீட்டின் அதிபதி பரம் பொருளான பரமாத்மாவேதான். பிச்சைக்காரன் அந்தப் ஆலயத்தை ஏறெடுத்துப் பார்த்தான். அவனுடைய மனம் ஒருவித தாக்கத்தால் தீச்சுவாலையால் எரிந்து அவனுள்ளிருந்து

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாரோ கூறுவது போலத் தோன்றியது. 'இது பச்சாதாபத்திற்குரிய விஷயம். இந்த வீட்டை விட்டு அகல்வது அசம்பாவிதம் ஆகும். இதோ கடைசி வீடு விட்டது. இதை அடுத்து எந்த வீடும் கிடையாது.' அவனுடைய மனதிலே ஒரு சங்கற்பம் ஏற்பட்டு விட்டது. உறுதி வாய்ந்த கற்பாறை போன்று அவன் மனம் கூறியது. 'இங்கிருந்து நான் வெறுங்கையோடு திரும்பமாட்டேன். இங்கிருந்து வெறுங்கையோடு திரும்பியவர்களின் கைகள் நிரம்பி இருந்தாலும் அதற்கு விலைதான் ஏது?'

அவன் அதே படிகளில் கீழே அமர்ந்து விட்டான். அவன் தன் வெறுங்கைகளை வானத்தை நோக்கி விரித்து விட்டான். அவன் தாகித்தவனாகிவிட்டான். அந்தத் தாகமே உண்மையான பிரார்த்தனை. நாட்கள் பல கடந்தன. மாதங்கள் உருண்டோடின. கோடைக்காலம் வந்தது. வசந்தம் வந்தது. குளிர்காலமும் கடந்து விட்டது. வருடமும் கடந்து விட்டது. அந்தக் கிழவனின் உயிர் மூச்சும் கடைசி நிலையை எட்டிக் கொண்டிருந்தது. ஆனால் அவனுடைய கடைசிக் காலத்தில் அவன் நடனமாடிக் கொண்டு இருந்ததை மக்கள் கண்டனர்.

அவனுடைய கண்கள் ஒருவித அபூர்வமான ஒளியால் நிரம்பி விட்டிருந்தன. அவனுடைய கிழ உடம்பிலிருந்து பிரகாசக்கீற்று ஒளிர்ந்து கொண்டிருந்தது.

அவன் மரணிக்கும் முன் ஒருவரிடம் கூறினான். 'கேட்பது கிடைத்து விடுகிறது. ஆனால் அதற்காக நம்மை நாமே சமர்பிக்க உறுதி கொள்ள வேண்டும்.'

நம்மையே சமர்பிக்கும் துணிவு.

நம்மை அழித்துக் கொள்ளும் துணிவு.

சூன்யமாகும் துணிவு.

தன்னை அழித்துக் கொள்ள உடன்பட்டவன் முழுமை பெற்றவனாகிறான். மரணிக்க ஒப்புக் கொண்டவன் ஜீவனை அடைந்து விடுகிறான். காலை வேளையில் நான் நடைபயிலுவது உண்டு. நதிக்கரையோரத்தில் ஒரு சிறிய அருவி கண்ணில் பட்டது. வழியில் கிடந்த சருகுகளை அகற்றிவிட்டு அந்த நீரூற்று நதியில் கலக்க ஓடிக் கொண்டிருந்தது. அதன் ஓட்டத்தைக் கண்டேன். அதன்பிறகு அது நதியில் மகிழ்ச்சி
பொங்க கலந்து விட்டதையும் கண்டேன். அதன் பின் அந்த நதியும் ஓடுவதைக் கண்டேன்.

அதற்கு பிறகு பார்த்தால் எல்லாமே ஓடிக்கொண்டிருக்கிறது, கடலில் கலக்க. எல்லை அற்றதில் இணைய. பூரணத்துவத்தை அடைவதற்காகவே எல்லா உயிர்களும், வழியில் கிடக்கும் உயிரற்ற சருகுகளை எல்லை அகற்றிவிட்டு, ஓடோடிக் கொண்டிருக்கின்றன.

துளி கடலாக விரும்புகிறது. இந்த சூத்திரம் தான் எல்லா ஜீவன்களுக்கும் இலட்சியமான சூத்திரமாகும். இந்த ஆதாரத்தின் மீதே அனைத்துமே அமைந்துள்ளது. அதன் பூரணத்தில் தான் ஆனந்தமே அடங்கியுள்ளது. எல்லை என்பது துயர் தரக்கூடியது. முழுமையற்றதும் துயர் தரக்கூடியது. வாழ்க்கைகுத் தடைக்கல்லாக நின்றிருப்பது வரம்பும் பூரணமற்றதுமே தான். அதன் காரணத்தால் தான் மரணத்தையும் எதிர்கொள்ள வேண்டியதாகிறது. அது இல்லாமல் ஆகும் போதே மரணமற்ற நிலை ஏற்படும். அது ஓர் இடையூறான தொல்லையாயுள்ளது. அது அகலும் போதே இடையூறும் அகன்று விடுகிறது.

ஆனால் மனிதன் அகங்காரத்தின் மையத்தில் நின்றுவிடுகிறான். அங்கேயே அவன் அந்த இடையூறிலே சிக்கி, வாழ்க்கையின் பிரவாகத்தை இழந்து விடுகிறான். இவ்வாறு அவன் தனது கைகளாலேயே சூரியனை இழந்து விட்டு, ஒரு

Digitized by Arunachalam Foundation.
www.tamilvu.org, arunachalam.org

சாதாரண சிறிய விளக்கின் ஒளியில் திருப்தியைத் தேடுவதில் அதிக பிரயாசை கொள்கிறான். அவனுக்கு அனுமதி கிடைக்கப் போவதில்லை. கடலை விட்டு விட்டு ஒரு துளியினால் எவ்வாறு திருப்தி கொள்ள முடியும்?

கடலாக மாறுவதை தவிர்த்து இதற்கு வேறு வழி கிடையாது. கடலே இலட்சியமாக வேண்டும்.

கடலாக மாறத்தான் வேண்டும். துளியை விடத்தான் வேண்டும். அகங்காரத்தை அழிக்கத் தான் வேண்டும். அகம் பிரம்மாவாக வேண்டும். அப்போதுதான் முழுமை வரும்.

கடலாக மாறுகின்ற முழுமையே சத்தியத்தை நம்முள் கொண்டு வரும் அத்தகைய முழுமையே மோட்சத்தைத் தரும். ஏனெனில் முழுமை இல்லாதவன் முக்தி எப்படி பெறுவான்?

ஏசுநாதர் கூறியுள்ளார்:- வாழ்க்கையை மீட்பவன் அதை இழந்து விடுகிறான். அதை இழந்து விடுபவன் அவனே அடைத்து விடுகிறான்.'

என்னையும் இதைச் சொல்ல விடுங்கள். இதுவே அன்பு. நம்மை இழத்தலே அன்பாகும். அன்பின் மரணத்தை அங்கீகரித்தலே பிரபுவின் ஜீவனை அடையும் வழியாகும். ஆகவே நான் சொல்வதைக் கேளுங்கள். துளிகளே, கடலை நோக்கிச் செல்லுங்கள். கடலே இங்கே இலட்சியமாகும். அன்பின் மரணத்தைத் தேர்ந்தேடுங்கள். அதுவே ஜீவன் ஆகும். கடலுக்கு முன் நின்று விடுபவன் மரணித்து விடுகிறான். கடலுக்குள் சென்று விடுபவன் மரணத்திற்கப்பால் சென்று விடுகிறான்.

-ஓஷோ-



Study & Earn in
SINGAPORE / MALAYSIA

VOICEKET

1001 Ways to Pay for College

Web : www.voiceket.com

VISA IN 3 WEEKS

HOSPITALITY MANAGEMENT
SCHOLARSHIP FOR THE FIRST 20 STUDENTS
6 months paidtraining(SGD 700- 1200 per month)

Bachelor of Engineering(Hons)
Electrical & Electronic Engineering
Bachelor of Science (Hons)
Bachelor of Arts (Hons)
Master of Business Administration (MBA)

Resort Management
6 month paid training
(SGD 700-1200 per month)

No need IELTS or TOEFL

No. 50, 1st Floor "Colombo Plaza", Wellawatte, Colombo-06.
Contact : 0777 315554 , 0777 775170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NO WOMAN, NO CRY

பொப் மார்லே

– மு.மயூரன் –

பொப் மார்லே (Bob Marley) பற்றி முதன் முதலாக எனக்கு தெரிய வந்த வழி மிகவும் சுவையானது. அவர் பற்றிய நல்லதொரு அறிமுகம் கிடைப்-பதற்கு சில மாதங்களுக்கு முன்னர் கூட அவரது இசைத்துண்டங்களை creativeecommong.org வலைத்-தளத்தில் பெற்று சிறிய பாடல்கள் செய்து விளையாடிக்கொண்டிருந்-தேன். அப்போது அந்த பெயரை எப்படி உச்சரிப்பது என்று கூட எனக்கு தெரிந்திருக்கவில்லை.



ஒரு நாள் இரவு, வழக்கம்போல வீதிக்கடையில் நாங்கள் இரவுணவு சாப்பிட்டு முடித்து அங்குள்ளவர்-களோடு கதைத்துக் கொண்டிருந்-தோம். அங்கே வேலைசெய்யும் ஊழியர் ஒருவர் பொப் மார்லே பற்றி எனக்கும் நண்பர்களுக்கும் சொல்லத் தொடங்கினார். அங்கே பாடிக் கொண்டிருந்த பழைய உடைந்து போன ரேடியோக் குறித்து ஆரம்-பித்த உரையாடலின் ஒரு கிளையா-கத்தான் பொப் மார்லேயின் கதை-யும் தொடங்கியிருக்க வேண்டும் என நம்புகிறேன். பொப் மார்லேயை ஒரு கிதார் இசைக்கலைஞனாக அறிமுகம் செய்த அவர், தொடர்ந்து பொப் மார்லே நீராடுவதில்லை எனவும், முடியைத் தொடர்ச்சியாக வளர்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வந்ததால் அங்கே சதை வளர்ச்சி கண்டு குளிக்க முடியாமல் போனதெனவும் சொன்னார். பொப் மார்லேக்கு கியூபா அடைக்கலம் கொடுத்தது குறித்தும் அங்கே அவருக்கென அரசாங்கத்தின் தயவில் கஞ்சா கிடைத்ததாகவும் பல கதைகளை எமக்குச் சொல்லிக் கொண்டிருந்தார். அவர் சொன்ன இந்த தகவல்களில் பெரும்பாலானவை பொய் என்றும் இட்டு நிரப்பட்டவை என்றும் பின்னர் அறிந்து கொள்ள முடிந்தது.

அந்த ஊழியரிடமிருந்து பொப் மார்லேயின் ஒரு பாடலையாவது கேட்டுவிட வேண்டும் என்று நான் அப்போது மிகவும் விரும்பினேன். ஆனால் அவருக்கு பொப் மார்லேயின் பாடல்கள் எதுவும் தெரிந்திருக்கவில்லை. அன்றிரவு இணையத்தில் அப்பாடகர் பற்றி சில தகவல்களைத் தேடிப் பெற்று வாசித்தேன். ஓரளவு அவரைப்பற்றிய அறிமுகத்தைப் பெற்றுக் கொண்டேன். அத்தோடு கறுப்பின நிலை அரசியற் கூறுகள், எதிர்ப்பிகைக்கூறுகள் அடங்கிய அவரது சில பாடல்களையும் சில தளங்களில் பெற்றுக் கேட்டுக் கொண்டேன். இச்சம்பவம் நடந்து சில காலங்களுக்குப் பிறகு நான் வசிக்கும் பகுதியிலும் சரி, மத்திய கொழும்புப் பகுதிகளிலும் சரி பொப் மார்லே மிகவும் பிரபலம் பெற்றிருப்பதை உணரக்கூடியதாக இருந்தது. பழைய சோனகத்தெரு டாம் வீதியுடன் இணையும் சந்தியில் ஒரு கைவிடப்பட்ட சுவரில் பெரிய எழுத்துக்களில் பொப் மார்லேயின் பெயர் எழுதப்பட்டிருந்தது. நான்கைந்து ஆட்டோக்களின் பின்புறம் அவர் பெயர் எழுதப்பட்டிருப்பதையும் அவர் படம் பொறிக்கப்பட்டிருந்ததையும் கண்டேன்.

குறுக்கான தோட்டங்களிலும் குடியிருப்புக்களிலும் சுவர் எழுத்துக்களாக, சிறு கோட்டுப்படங்களாக பொப் மார்லே இருந்தார்.

ஆட்டோ, வாகன உதிரிப்பாகங்கள் விற்கும் கடைகளில் பொப் மார்லேயின் படம் பொறித்த சில வாகனப் பாகங்களைக் கண்டேன்.

இது எனக்கு உண்மையிலேயே ஏகப்பட்ட ஆர்வத்தைத் தூண்டிவிட்டது. எதிர்ப்பரசியல் கூறுகளைக் கொண்ட, ஆங்கிலப்பாடகன் அதுவும் கிதார் இசைக்கலைஞன் இந்தச் சூழலில் எப்படி இவ்வளவு பிரபலம் பெற்றிருக்க முடியும் என்பது பெரும் குழப்பமாகவே இருந்தது.

ஏ.ஆர். ரஹ்மான், பாத்யா சந்தோஷ் போன்றவர்களுக்கே கூட இந்த சூழலில் பெரிய பிரபலம் இல்லையே... சுவரில் எழுதிப் போற்றி வணங்குமளவுக்கு பொப் மார்லே ஏன் இங்கே முக்கியத்துவம் பெறுகிறார்? இயல்பாகவே இந்தப் பெருங்குழப்பம் என்னை விசாரணைக்குத் தூண்டிவிட்டது. எனக்கு ஆரம்பத்தில் கதை சொன்ன கடைக்கார நண்பரிடம் பொப் மார்லேயின் பாடல்கள் எனக்கு வேண்டும் என்று கேட்டுக் கதையைத் தொடங்கினேன். அவருக்கு அப்பாடகனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்கள் பற்றியோ, அதை எங்கே பெறலாம் என்பது பற்றியோ எந்த விதமான தகவலும் தெரிந்திருக்கவில்லை. ஆட்டோ ஒன்றில் பயணம் செய்த போது அங்கே பொப் மார்லேயின் படமிருக்கக் கண்டு அந்த ஆட்டோக்காரரிடமும் பாடல் கேட்டுப்பார்த்தேன். அவருக்கும் அதைப்பற்றியெல்லாம் தெரிந்திருக்கவில்லை அப்படியானால், இங்கே பொப் மார்லே யார்? இங்கே மட்டுமல்ல, கொழும்பில் இவ்வாறான எல்லா இடங்களிலும் அவர் பெரிய ஆள் ,கடவுளிலும் அவர் பெரிய ஆள். கடவுளின் தூதர் கஞ்சாத் தூதர்..! எனக்கு ஆரம்பத்தில் தகவல் சொன்னவர் கஞ்சா (இப்படிச் சொன்னால் அவர் கோபிப்பார். கஞ்சா என்பது கீழ்த்தரமானது அதில் 'மல்' என்றொரு வகையே அவர்கள் புகைப்பர்) புகைப்பவர். அத்தோடு வீதிக்கடைகளில் பகுதி வியாபாரமாகவோ அல்லது முதன்மை வியாபாரமாகவோ மல் விற்பனையே நடக்கும்.

கொழும்பில் 'மல்' புகைப்பவர்கள் எல்லா மட்டங்களிலும் இருக்கிறார்கள். பல்கலைக்கழகம் தொடக்கம், பாரந்தூக்கும் தொழிலாளர்கள் வரைக்கும். 'மல்', ஜொய்ன்ட், கஞ்சா பழக்கத்துடன் இவர்களுக்கெல்லாம் அறிமுகமாகும் நபர்தான் பொப் மார்லே.

கஞ்சாப்பழக்கத்தை நியாயப்படுத்தவும், அதற்கொரு அங்கீகாரம் பெறவும் இவர்களுக்கு ஒரு 'ஏற்றுக்கொள்ளப்பட்ட' தூதுவர் தேவை. ஒரு பிரபலம் தேவை. அந்தப்பணியை செவ்வனே செய்பவர் இங்கே பொப் மர்லே.

பொப் மார்லேயின் பெயரும், அவர்களது ஆட்டோக்களிலும் சுவர்களிலும் பொறிக்கப்பட்ட முகப்படமும் கஞ்சா விற்கும் அவர்களுக்கும் பெரிய அங்கீகாரத்தினை வழங்குகிறது. அங்கீகாரத்தை விடவும், கஞ்சாத்தூதுவர் ஒருவர் தேவைப்படுகிறார். ஆரம்பநிலை மார்க்சீய ஈடுபாட்டாளர்களுக்கு சே , லெனின் போல, பின்னவீனத்துவ ஆட்களுக்கு கைகளில் கழுத்தில் போடும் உருத்திராட்ச மாலை, ஃபூக்கோ போல கஞ்சாப்புகைப்பவர்களுக்கு பொப் மார்லே! பாரதியார் கஞ்சா புகைத்தவர் என்றும் சொல்கிறார்கள். விபரம் தெரியவில்லை. பொப் மார்லே ஆரம்ப காலங்களில் ஈடுபட்டிருந்த ரஸ்தஃபாரி மதப்பிரிவின் சமயக்கடமைகளுள் அல்லது வழக்கங்களுள் ஒன்றாக கஞ்சா புகைத்தலும் இருந்தது. கஞ்சா அவர்கள் மதப்பிரிவில் ஒரு புனிதப் பொருளாக அங்கீகாரம் பெற்றிருந்தது. கையா எனப்படும் ஒருவகை கஞ்சா புகைப்பதைப் பற்றிய பொப் மார்லேயின் பாடல் ஒன்று.

(Wake up and.....)
(Wake up and.....)
(Wake up and.....) Wake up and turn I loose,
For the rain is fallin'!

Got to have kaya now (kaya, kaya),
Got to have kaya now (kaya, kaya),
Got to have kaya now (kaya, kaya),
For the rain is fallin'!

W e-e-e-e-e-ell, I feel so High, I even touch the sky
Above the fallini:' rai!
I feel so good in my neighbourhood so::
Here I come again!

I, ve got to have kaya now (kaya, kaya),
Got to have kaya now (kaya, kaya),
I, ve got to have kaya now (kaya, kaya),
For the rain is fallin:'!

/Instrumental break/

Wo-wo-oh! yea-ea ea-eah! I feel so High/ I even touch the sky
Above the fallin:' rain/ we-e-ell!
I feel so good in my neighbourhood/ so::
Here I come again!

i:'ve got to have kaya now!
I:'ve got to have kaya now!
I:'ve gpt to have kaya now,
For the rain is fallin:'

Get up and turn I loose;
Wake up and turn I loose;
Wake up and turn I loose;
For the rain is fallin'

We-e-e-ell, kaya, man1 (kaya, kaya)
kaya/man1 (kaya, kaya),
Got to have kaya now (kaya, kaya),
For the rain is ... rain is fallin;!
Wake up and turn I loose;
Wake up and turn I loose;

பாடலுக்கு நன்றி: அமாரொக்

நானும் நண்பர்களும் இப்போது அந்த கடைக்கார நண்பரை பொப் மார்லே என்று தான் அழைக்கிறோம். அவரும் நட்போடு ஒரு புன்னகையும் சல்யூட்டும் தருவார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யாழ்

என்னவாக இசைத்துக் கிடந்தது ?
ஏழிசைச் சுரம் அள்ளிப் பொழிந்தது.
மன்னர் கூட மயங்க ஒலித்தது.
மகிமையிற்குப் பரிசாய்க் கிடைத்தது.
தொன்மையானது...சொத்தென நின்றது.
சொக்கவைக்கும்... இனிமை படைத்தது.
இன்பயாழது..இன்றாமை ஆனது.
என்னவானது ? உயிர்ப்பும் இழந்தது.

இன்சுரம் மீட்டும் தந்தியொவ்வொன்றையும்
எவர்கள் நித்தம் நித்தம் அறுத்தனர் ?
மென்மை சேர் இசைச் சுருதி கலைத்துமே
மீட்டும் கைகளை யார்தான் முறித்தனர்?
மன்னவர் அரியணையிலே வைத்ததை
மனிதர் யார்...தூக்கிக் குப்பையில் வீசினர் ?
அன்று 'சின்னமாய்' திகழ்ந்த புனிதத்தை
அபத்தரோ...துடக்காக்கி ஒதுக்கினர்.

இந்த யாழினைக் குப்பைக் கிடங்கிடை
இருந்து எவர்தான் மீட்டு எடுப்பரோ ?
இந்த யாழின் துடக்கைக் கழித்ததன்
இளம் புனித எழிலை யார் காப்பரோ ?
இந்த யாழுக்குத் தந்தி யார் தைப்பரோ?
இந்த யாழுக்கு சுருதி யார் சேர்ப்பரோ ?
இந்த யாழ் மீண்டும் ஆயிரம் இராகங்கள்
இசைக்க...யார் மீட்டப் போகும் கலைஞனோ ?

து.ஜெயசீலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் ஒரு TV நடிகனாகத் தலை காட்டின சோகக் கதைய உங்களிட்டைச் சொல்லித் தான் ஆகவேணும். அதைத் தெரிஞ்சு கொள்ளாட்டால் உங்களுக்கு ஒண்டும் ஆகப்போறேல்லை. ஆனால் அதைச் சொல்லாட்டில் எனக்குத்தான் தலை வெடிச்சுப் போயிரும்

நான் TV நடிகனான கதை

கொழும்பு வாழ் தமிழ் மக்களுக்கு, அதிலும் குறிப்பாக எங்கட யாழ்ப்பாணியளுக்கு ஒரு நல்ல குணம். ஆரையும் லேசில நம்பாயினம், சந்தேகக் கண்ணோடதான் எல்லாரையும் பாப்பினம். எந்தப் புத்தில எந்தப் பாம்பிருக்குமோ ஆருக்குத் தெரியும்? அதால இலகுவா ஆரிட்டயும் பிடிகுடுத்துப் பேசாயினம். கழுவுற மீனில நழுவுற மீனா ஓடித்தப்பி வாழ்க்கைப் போராட்டத்தில வெற்றிக் கொடி நாட்டிற சூக்குமம் தெரிஞ்சவை. இந்த நாசமறுப்புகள் ஒண்டும் தெரியாத ஒரு மொக்கு வாத்தி நான்.

இத்துப் போன பழைய 'ஐசீ'யைப் பக்குவமாப் பொக்கற்றுக்க பொதிஞ்சு கொண்டு, இருக்குதோ எண்டு அடிக்கடி தடவிப் பாத்துத் திருப்திப் பட்டுக் கொண்டு, 'எந்தச்' செக் பொயின்ரில எந்தப் படுபாவியிட்டயாவது மாட்டுப்பட்டு விடுவமோ' எண்டு முழிசிக் கொண்டு கொழும்பு நகர வீதியலில வலு அவதானமாக வலம் வந்து, குடியிருக்கிற வாடகைப் பொந்தில பெரும்பாலான நேரமும் ஒளிஞ்சு கொண்டு, வாழ்க்கையை ஓட்டுற சராசரித் தமிழ் ஜந்துக்களில் நானும் அடக்கம்.

அப்பப்ப வானொலிகளில போடுற சில நாடகங்களில் நடிச்சுப் போட்டு வந்து, மனிசியின்ர 'பேர்மிஷனோட கொஞ்சம் தண்ணியடிச்சுப் போட்டு 'பெரிய சிவாஜி-கணேசன்' ஆகிற்றதான நினைப்பில அலம்பிறத விட பெரிய பிழை ஒண்டும் செய்யாத அப்பிராணியான ஆள் நான்.

அப்பிடியே அலுப்புத் தீரக் கொஞ்சம் 'அடிச்சுப் போட்டிருந்த' ஒரு நல்ல(?) நாளில, TV யில வந்த ஒரு விளம்பரம் என்ர கண்ணில பட்டுத் துலைச்சுது (Double) டபிளா!

'பிரபலமான தமிழக நடிகர்களுடன் நடிக்க நமது நாட்டு நகைச்சுவை நடிகர்களுக்கு அரிய வாய்ப்பொன்று கிடைத்திருக்கிறதாக' அது விளம்பிச்சுது. சிவாஜி கணேசனா என்னைப் பற்றி நினைச்சுருந்த நான், சந்திரபாபுவாக மாத்திக் கொண்டிட்டன். வெறிமுறிய முந்தியே வீச்சாக்களத்தில இறங்கீற்றன்.

பென்சன்' எடுத்தாப் பிறகு பேசாம ஈலிசேரில (அப்படி ஒன்று வீட்டில் இல்லாவிட்டாலும்) சாஞ்சிருக்கிறத விட்டிட்டு வெளிக்கிட்டிட்டார்?' எண்ட மனிசியின் நக்கலையும் புறந்தள்ளிப் போட்டு, வானொலி, மேடை நாடக அனுபவங்கள் எண்டு கொட்டிக் கிடந்த எல்லாத்தையும் தூசு தட்டி, 'ரச்' சிங்கா ஒரு சுய புராணத்தை அவிட்டு விட்டு அனுப்பி வச்ச

G.P.வேதநாயகம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விண்ணப்பத்தை அறுவான்கள் ஏற்றுக் கொண்டு 'நேர்முகத் தேர்வுக்கு வாங்கோ' எண்டு அழைச்சது அதிசயந்தான்!

பத்திருபது வருடங்களுக்கு முன்னால் தமிழ்த் திரையுலகில் பிரபல்யமான ஒரு நகைச்சுவை நடிகர் தேர்வு செய்யக் காத்திருந்தார். அவரைக் காபந்து பண்ணுவதாக 'பாவ்லா' பண்ணும் எங்கட ஊர்க்காரரின் 'காக்கா' பிடிப்புக்கள். கொஞ்சக் காலமாக .... நக்கிக் கொண்டு திரிஞ்ச ஒருத்தர் எப்படித் தப்பி இங்க திரும்பவும் வந்தாரோ எண்டு ஆச்சரியப்பட்டன்.

நகைச்சுவை நடிகர் தன்ர முழிக்கண்ணை மறைக்கவோ என்னவோ 'கூலிங் கிளாஸ்' ஒண்டைப் போட்டுக் கொண்டு நேர்முகத் தெரிவை நடத்தினார். கட்டபொம்மன் வசனத்தில அவிட்டு விடுறதோ, மனோகரனா மாறுறதோ அல்லது சொந்தச் சரக்கில தாளிச்சு கொட்டுறதோ எண்டு எனக்குள்ள ஒரு குழப்பம்.

போன கையோட நடிகர் என்ர வயசைக் கேட்டார். நான் சொன்னன். ஆள் ஆடிப் போனார், என்ர வயசோட ஒப்பிட்டா, ஆள் சின்னப் பெடியன்., அதாலை என்னை நடியும் எண்டு சொல்லிப் பார்க்க அவருக்குக் கொஞ்சம் சங்கடமாப் போயிற்று.

போன கையோட நடிகர் என்ர வயசைக் கேட்டார். நான் சொன்னன். ஆள் ஆடிப் போனார். என்ர வயசோட ஒப்பிட்டா. ஆள் சின்னப் பெடியன்..

அவர் தேவையில்லை எண்டு சொல்லியும் நான் விடேல்லை. 'பாரப்பா பழினியப்பா என்ர நடிப்பைப் பாரப்பா' எண்டு அவரைப் பயப்படுத்தி 'போதும் போதும்' எண்டு அவர் சொல்ற அளவுக்கு கலரைக் 'காட்டிக்' கலக்கீற்றன்.

என்ன சொல்லி என்ன, துர் அதிர்ஷ்டவசமா அந்தத் தொலைக்காட்சி நாடகத்தில நடிக்க என்னையும் 'செலக்ட்' பண்ணிப் போட்டினம்!

புளுகமெண்டால் புளுகம் அப்பிடி ஒரு புளுகம் எனக்கு. பிறகென்ன, நூற்றுக்கணக்கான நம் நாட்டுக் கலைஞர்களுக்கு கிடைக்காத வாய்ப்பு எனக்குக் கிடைச்சிருக்கெண்டால் சும்மாவே! (நேர் முகத் தெரிவுக்கு வரச்சொல்லி வந்தவை எண்ணி அம்பதுக்க தான் எண்ட விசயத்தை நான் சொல்லக் கூடாது. அது பரிசுகேடு)

நாடக டிறெக்டரும் (நெறியாளர் எண்டு நல்ல தமிழிலை சொன்னால் அது கன பேருக்கு விளங்காது) தமிழ் நாட்டிலயிருந்து வந்திருந்த நடிக நடிகையரும் வெள்ளவத்தையில ஒரு ஹோட்டல்ல தான் தங்கினவ. ஷூட்டிங்குக்கு முதல் நாள் தன்னை வந்து சந்திக்கச் சொல்லி டிறெக்டர் கோல் எடுத்துச் சொன்னார். நானும் போனன்.

அவரைக் கண்டு கதைச்சுக் கொண்டிருக்கேக்க தான் அவயள் ' எண்ணையில்லாமல் பணியாரம் சுட வெளிக்கிட்டிருக்கிற விஷயம்' எனக்கு விளங்கீச்சுது. அதென்னெண்டால், மற்ற நாள் சூட்டிங்குக்குத் தோதான வீடொண்டும் அவயளுக்கு இன்னும் அகப்படேல்லையாம், தேடிக் கொண்டிருக்கினமாம்.

ஏதோ தேடுகினம், தேடிக் கொள்ளட்டும் எண்டு என்ர வாயை வச்சுக் கொண்டு நானும் சும்மா இருந்திருக்கலாம். கூடப் பிறந்த புளுகுக் குணம் இருக்க விட்டால் எல்லே,

நான் வாடகைக்குக் குடியிருக்கிற வீடு புதுசாக் கட்டினது. பெரிசெண்டு சொல்லேலாது, எண்டாலும் சில நேரம் உங்களுக்குச் சரிப்பட்டாலும் சரிப்படலாம், எதுக்கும் வீட்டு ஓனரைக் கேட்டு சொல்றனே' எண்டு சொல்லித் துலைச்சுப் போட்டன்.

தேடிப் போன மூலிகை காலில பட்டால் விட்டிட்டு ஓட அவ ரொண்டும் மண்டேல மசாலா இல்லாத ஆளில்லையே. 'கப்' பெண்டு பிடிச்சுக் கொண்டிட்டார். பிறகென்ன வந்தார் :கண்டார்:வென்றார்' எண்ட சீசரின் கதைதான். வீட்டுக் காரருக்கும் தங்கட வீடு ரீவீயில வரப்போகுதெண்டதில புளுகம் தான். தாங்கள் தலைகாட்டாட்டிக்கும் தங்கட வீடாவது தலைய மாத்திரமில்லை முழு உடம்பையும் சுத்திச் சுத்திக் காட்டப் போகுதே எண்ட சந்தோசம் அவயளுக்கு. சூட்டிங்குக்கு வீட்டை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விட்டால் என்னபாடு படும் எண்ட அனுபவம் அவையளுக்கு அப்ப இருக்கேல்லை. எனக்கும் தான்.

எங்கட வீட்டிலையே சூட்டிங் எண்ட உடன மனிசி தங்கச்சி பிள்ளையளுக்கெல்லாம் நிலத்தில கால் படவேல்லை. அறிஞ்சவ தெரிஞ்சவை எல்லாருக்கும் 'கோல்' எடுத்தே களைச்சுப் போச்சின.

அடுத்த நாள் 'ஷூட்டிங்' துவங்கிச்சுது. விடிய விடிய 'லொறி' ஒண்டில ஜெனறேற்றர்' வந்திறங்கிச்சுது. றோட்டில சிங்களச் சனமெல்லாம் கூடீற்றுது. என்ன விஷயம் ஏது விஷயம் எண்டு விளங்காமல் இது 'வேற ஏதோ விஷயமா'க்குமெண்டு ஊகிச்சு 'பொலிசுக்கு அறிவிக்க வேணும்' எண்டு கசமுசப்படத் துவங்கிற்றுது. வேற ஒண்டுமில்லை. எங்கட வீட்டுக் காரர் யாழ்ப்பாணத்து ஆள். கிட்டடில தான் அந்த வீட்டை வாங்கியிருந்தவர்.

கொஞ்ச நேரத்தால பிரபல நகைச்சுவை நடிகரும் ஆச்சி நடிகையும் காரில வந்து இறங்கிச்சினம். அவையளக் கண்டோடன தான் ' சீனா'ப்பிள்ளையளுக்கு விஷயம் வெளிச்சுது. நல்ல வேளையா TVயில அதுகள் தமிழ்ப்படங்களையும் பாத்திருக்குதுகள். வாழ்க TV! இல்லையெண்டால் பொலிஸ் வந்து எங்களையெல்லாம் அள்ளிக் கொண்டு போனாலும் போயிருக்குமெல்லே?

அதுக்குப் பிறகு World Trade Centre மாதிரித்தான், கொஞ்ச நாளுக்கு எங்கட வீடு. அவ்வளவு 'பேமஸ்' இந்தியாக்காரரை ஹோட்டல்ல கொண்டு போய் விட்டதோட எங்கிட வேலை சரி எண்டிருந்த ரிவிக்காரர் இருந்தாப் போல வந்திறங்கிச்சினம். வீட்டுப் பூசையறையில பூசையத் துவக்கி தங்கிட முகம் விழுமாப் போல TV கமெராவால படம் எல்லாம் எடுத்தாப் பிறகு 'ராற்றா' காட்டீற்று 'துரை' மார் கழண்டிட்டினம்.

போகப் போகத்தான் விளங்கிச்சுது.. வீட்டை ஷூட்டிங்குக்கு விட்டால் என்ன ஆகுமெண்டு. காலுக்கையும் கையுக்கையும் பாம்புகள் போல 'வயர் 'ஓட Focus Light களை அங்கயும் இங்கயுமா தூக்கிக் கொண்டு நாலைஞ்சு பேர் அலைய, ஊசாட வழியில்லாமல் வீட்டுக்காறர் எல்லாம் மூலேக்க பதுங்க வேண்டியதாப் போச்சுது.

ஷூட்டிங் தொடங்கினதும் வேற என்ன ஆச்சுதெண்டு தெரிய வேணுமென்டால்.....

காத்திருங்கோ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் உறவையும் உணர்வுகளையும்
பொருளாய்ப் பண்டமாய்
உலகெங்கும் எடுத்துச்செல்ல
நாங்கள் தயார்

EXPRESS CARGO
GLOBAL DISTRIBUTION NETWORK



GLOBAL DISTRIBUTION NETWORK
NO.215/A ½, George R. De Silva Mawatha, Colombo - 13, Sri Lanka
Tel : 94 11 2437246, 94 11 2437551,Mob : 94 77 3910667, 94 77 7386665
Fax : 94 11 2437250, e.mail : expresscargo@slt.lk

உத்தியோகம்..

அந்த மனிதனை ஒரு "பிச்சைக்காரன்" என்று என்னால் சொல்ல முடியவில்லை. 'அவன் ஒரு பிச்சைக்காரன்' என்று என்னால் தீர்மானிக்கவும் முடியவில்லை. சமுதாயத்தில் சக மனிதனிடம் கையேந்தி வாங்கிச்சாப்பிடும் அளவுக்குத் தாழ்ந்து வீழ்வதற்கு ஒரு பிரஜையின் நிலைமை ஏன் மாறுபடுகின்றது....? பிச்சைக்காரர்களாக ஒரு பிரிவினர் மாறிவிட்ட பிறகும், அவர்கள் மத்தியிலும், பல உயர்வு தாழ்வு கொண்ட பிரிவினர் வேறுபட்டுக் காணப்படுகின்றனரே...? எனக்கு சமுதாய ஆய்வு செய்யக் கூடிய அளவுக்கு ஞானம் போதாது. எனது சந்தேகம்... அதற்கான கேள்விகள். யாவற்றையும் விட்டுவிடுவோம் என்ற தீர்மானத்துக்கு வந்துவிட்டேன். அவன்.. அந்த பி.ச்.சை.க்.கா.ர.ன் இன்னும் நான் இருக்கும் அந்த பஸ்ஸில் பாடிக் கொண்டுதான் இருக்கிறான்... பாட்டு இன்னும் முடியவில்லை. அவன் பஸ்ஸில் ஏறியவுடன் தன்னை பிரயாணிகள் மத்தியில் அறிமுகப்படுத்திக் கொண்டதே வினோதமாக இருந்தது. அவன் தன் தாய் மொழியான சிங்களத்தில் துள்ளியமாகச் சொன்னான். அவனது வார்த்தைகள் நன்றாக மனனம் செய்துக் கொள்ளப்பட்டவைகளாகும். ஒவ்வொரு பஸ்ஸிலும் அந்த ஆரம்ப உரையை அவன் ஆற்றுவான் போலிருக்கிறது. "நோனாவருனி.. மஹத்வருனி ஒப யன கமன னே.. மம மினீ மரன்னே...! ஒபெ கமன சுப பமனக் வென்னட்ட மம கீத்தயக் காணனா கரமி....! மட்ட சுளு ஆதாரயக் தெய்கியா பலாபொரொத்து வெனவா....! (நான் பொய், களவு, சூது, கொலை செய்து வாழ்பவனல்ல... உங்களால் முடிந்த உதவியை செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்... "அவன் பாடுவதற்கு முன்பு வாயினால் இடை இசையை எழுப்பினான்.... "டொட டொட டொங்..தோளில் தொங்கிய கிட்டார் கருவியை மீட்டினான். அந்தப் பாடல் எனக்கு இன்னும் ஞாபகத்தில் இருக்கிறது. சிங்கள பைலா சக்கரவர்த்தி என அழைக்கப்-

புருஷ லட்சணம்....?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும் எம்.எஸ்.பெணாட்டோ பாடியதுள்ளல் இசை அது...!

"லஸ்ஸன ரோசமலக்
மட்ட லஸ்ஸன நே..
லஸ்ஸன சமனலயத்
மட்ட லஸ்ஸன நே..
ஆதரவந்தியே
ஒப..வாகே நே....!"

அழகிய ரோஜா மலர் எனக்கு அழகாக இல்லை...! அழகிய வண்ணத்திப் பூச்சியும் எனக்கு அழகாக இல்லை...! அழகான எதுவுமே எனக்கு அழகாக இல்லை...! அன்பிற்கினியவளே உன்னைப் போல எதுவுமே அழகாக இல்லை...! இளமையில் காதல் தாகம் கொண்ட ஒரு இளைஞன் தன் காதலியிடம் பாடுகின்ற பாடல் அது. பஸ் ரசிகப் பயணிகளின் மனதைக் கவர்ந்தது. அவன் மீண்டும் பாட்டுக்கிடையிலான 'உந்து இசையை' வாயிலேயே இசைத்தான். டொட டொட டொங்... டொட டொட டொங்... அந்தப் பிச்சைக்.... இல்லை... இல்லை.. அந்த ஆளை நோட்டமிட்டேன்... அவன் அணிந்திருக்கும் டெனிம் ட்ரவுசர் ஆயிரத்து ஐநூறு ரூபா பெறும். ஸ்போட்ஸ் சப்பாத்து ஆயிரம் பெறும். கைக் கடிகாரம், செப்பு வளையல் இரண்டும் ஆயிரம் பெறும்... டூசேட் எழுநூறு... கிட்டார் ஆறாயிரம் பெறும்.. எல்லாம் மொத்தமாக பத்தாயிரத்து இருநூறு பெறுமதியாகும்... அவன் என்னை விட ஏழாயிரம், எட்டாயிரம் மேலதிகப் பெறுமதியாக இருந்தான்...! பாடல் முடிந்ததும் பஸ் பயணிகளிடம் அன்றைய திவயின பத்திரிகையை மடித்து. நீட்டிக் கொண்டு வந்தான். கையேந்த வில்லை...! எல்லோரும் சில்லரை போட வில்லை.. பத்து... இருபது... என்று நோட்டுகளையும் ... ஏழை பாழைகள் ஐந்து ரூபாய் 'பவுனை' போட்டார்கள்... எனக்கு பாரதியாரின் ஞாபகம் வந்தது.. அவர் கை நீட்டி யாரிடமும் காசு கேட்க மாட்டாராம். விரித்த கையை நெஞ்சுக்கு நேராக வைத்துக் கொண்டு, நண்பர்களைப் பார்த்து "காசு இருந்தால் என் கையில் வையுங்கள்..." என்பாராம். "பொஹொம ஸ்துதிய். பொஹொம ஸ்துதிய்...!" என்று கூறிக் கொண்டே பின் கதவு வழியாக இறங்கிச் சென்றவன் மீண்டும் முன் கதவால் ஏறி, நன்றியும். சுப பயணத்துக்கு வாழ்த்தும் கூறி.. அடுத்து நிற்கும் பஸ்ஸுக்குள் உற்சாகமாக ஏறினான்....இவன் எடுப்பது பிச்சையா...? அல்லது காலத்துக்கேற்ப பிச்சைக் கேட்பது நவீனமயமாக்கப்பட்டுள்ளதா? இவனை என்ன சொல்லி அழைப்பது..? "ஆஜானுபாகு" வாக இருக்கின்றான்... வறுமையின் அடையாளம் இம்மியளவும் இல்லை. இவனுக்கு உழைத்துத் தொழில் செய்து பிழைக்க முடியாதா..? மீண்டும் என்னுள் சமுதாயக் கேள்வி எழுந்து வளைந்து நின்றது. ஒளவையார் "ஏற்பது இகழ்ச்சி" என்று ஏளனம் செய்து விட்டு. அடுத்த வரியில் அறம் செய்ய விரும்பு என்று போதனை செய்தது முரணாக இல்லையா..? என்னமோ சங்க காலத்திலும் பெருமளவு புலவர்கள் ஏதோ ஒரு வகையில் கையேந்தித்தான் வாழ்ந்தார்கள் என்ற வரலாறு இருக்கின்ற போது, ஒரு கிட்டார்காரன் கையேந்துவதில் என்ன விவகாரம் இருக்கின்றது...? இந்த கிட்டார் பிச்சைக்காரனின்... இந்த டெனிம் பிச்சைக்காரனின் ஒரு நாள் வருமானம் எவ்வளவு கிடைக்கும் என்ற ஆய்வில் மனம் நுழைந்தது. பஸ் வண்டி இன்னும் அரை மணித்தியாலம் சென்றுதான் புறப்படும். நானிருந்த பஸ்ஸில் நாற்பது பேர்கள் வரை இருந்தார்கள். அவர்களில் சிலர் ஜன்னல் பக்கம் திரும்பிக் கொண்டும், புத்தகத்தைப் புரட்டிக் கொண்டுமிருந்தார்கள். அவர்களுள் இருபது பேர் பத்து ரூபாய் வீதம் போட்டிருந்தாலும்.. 200 ரூபாய்...! ஐந்து ரூபாய் வீதம் போட்டிருந்தாலும் 150 ரூபாய்..! கண்டி போன்ற நகரத்தில் ஒரு நாளில் குறைந்தது நூறு பஸ்களாவது வந்து போகும். 100X150=15,000 ரூபாய். 100X200=20,000 ரூபாய்.. அப்படியென்றால் 30 நாட்களுக்கு 45 ஆயிரம் முதல் 60 ஆயிரம் வரை கிடைக்கின்றதே...! ஏஜென்சி... வெளிநாடு... விசா.. கள்ள விசா... இவையெல்லாம் தேவையா ...? எனது ஆய்வு மூளை பம்பரமாகச் சுழன்றது... "வாழ நினைத்தால் வாழலாம். வழியா இல்லை பூமியில்...?" என்ற கண்ணதாசனின் வரிகள் என்னிடம் வினா தொடுத்தன. பஸ் இன்னும் புறப்படவில்லை.. ஒரு இளம் பெண் பஸ்ஸுக்குள்ளே ஏறினாள். பல வகையறாக்களில் அதிஷ்ட சீட்டுக்களை நீட்டிக் கொண்டு.. "அத அதினவா...!" என்று எல்லோரிடமும் வந்தாள். எல்லோருமே அவளிடம் டிக்கெட் வாங்கினார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நானும்தான் வாங்கினேன். அவள் அழகான பெண் என்பதற்காகவா... அல்லது கௌரவப் பிரச்சினையிலா..? அவள் தொப்பி அணிந்திருந்தாள். தோளில் ஒரு பை தொங்கியது. பணத்தை பைக்குள்ளே போட்டுக்கொண்டாள். முப்பது டிக்கட் விற்றிருப்பாள்.. 2 ரூபா கமிஷன் என்றாலும் அந்த பஸ் வண்டியில் 60 ரூபாய் அவளுக்குக் கிடைத்தது. அப்படியென்றால் நூறு பஸ்ஸில் 60 ரூபாய்படி... மனம் கூட்டிப் பெருக்கிக் கொண்டிருந்தது. அவளும் இறங்கிச் சென்று விட்டாள்...! அடுத்து ஒரு கடலைக்காரன் நுழைந்தான். பொரித்த நிலக் கடலை... அவன் லாவகமாக ஒரு கையில் ஏந்தியிருக்கும் பேசனைச் சுற்றி... பாமசியில் மாத்திரை போட்டுக் கொடுக்கும் ஒரு காகித கவர் மாதிரி அடுக்கியிருந்தான். நடுவே பொரித்தக் கடலை. மறு கையில் ஒரு அழுக்குப் படிந்த பிளாஸ்டிக் குப்பி.. அதற்குள்ளே உப்புத் தூளும், மிளகாய்த்தூளும் கலந்த ஒரு கலவை வைத்திருந்தான். "5 ரூபாய்க்கு" என்றதும்

பேசினுக்கள்ளிருக்கும் அந்த சிறிய மூடியில், இரண்டு தரம் அள்ளி காகிதப் பக்கட்டுக்குள் போடுகிறான். பிறகு பிளாஸ்டிக் குப்பியை பக்கட்டுக்குள் பிசுக்கி ஒரு குலுக்கு குலுக்கிக் கொடுக்கிறான். நிலக்கடலை, உப்புக் கலந்த மிளகாய் தூளுடன் ருசியாக இருக்கிறது. கடலை வாங்கிகளும் ஒரு இருபது பேர் இருப்பர். 5 ரூபாய் படி 20 பேருக்கு நூறு ரூபாய். 100 பஸ்ஸில் ஏறி இறங்கினால். 10,000ம் ரூபாய் மனம் ஆதங்கப் படுகிறது... "வழியா இல்லை பூமியில்?" கண்ணதாசன் மீண்டும் நினைவுக்கு வருகிறார்....நான் பஸ்ஸில் 'ட்ரவலிங் பேக்கை' வைத்து விட்டு பக்கத்து சீட்காரரிடம் "டொயிலட்டுக்கு ஓடிட்டு வர்றேன். கண்டக்டரிடம் சொல்லி வைங்க.." என்று இறங்கினேன்... எந்த காலத்திலேயாவது நாம் நினைத்துப் பார்த்திருப்போமா? 'அந்த இடத்திலயும்' கதிரையைப் போட்டு உட்கார்ந்து கொண்டு 5 ரூபாய் வாங்கும் "அதிகாரி" யைப் பற்றி..?ஒருவருக்கு 5 ரூபாய். அந்த மலசலகூட "அதிகாரியிடம்"5 ரூபாய் இல்லாமல் மூன்று2 ரூபாய் சில்லறைகளை கொடுத்து விட்டு வந்தேன். தமிழ் நாட்டில் 'எங்கும் சுதந்திரம்...!' தெருவெல்லாம் மூத்திர நெடி காற்றோடு கலந்திருக்கும்.. நம் நாட்டில் பண்பாடு கொஞ்சம் இன்னும் காப்பாற்றப்பட்டு வருகின்றது. "இங்கே சிறுநீர் கழிக்காதீர்" அல்லது "இங்கே மூத்திரம் பெய்யக் கூடாது...!" என்ற எச்சரிக்கை விளம்பரங்களைப் பார்த்த பிறகுதான் அதே இடத்துக்குச் சென்று கழிப்பதற்கு மனம் அழைத்துச் செல்கிறது. செட்டித் தெருவில் ஒரு முடுக்கு ஒழுங்கை. பழைய மீன் கடைக்கு ரெக்லமேஸன் ரோட்டுக்குப் போகும் பாதை ஒரே சிறு நீர் வெள்ளமாய் நரகமாகக் காட்சி தரும். இந்த நினைவோடு என் மனம் இன்னொரு விளம்பரத்தையும் நினைத்தது. மருதானையிலிருந்து தொழில் நுட்பக் கல்லூரி வழியாக ஒல்கொட் மாவத்தைக்கு வரும்போது இடது பக்கமாக அதாவது சுவதேசி அச்சகத்துக்கு எதிர்புறமாக ஒரு ஒதுக்குப்புற இடத்துச் சுவரில் "மெஹி மூத்ரா கிரீம பல்லன்ட பமனய்..!" இங்கே மூத்திரம் பெய்வது நாய்களுக்கு மட்டும்...!" என்று ஆத்திரமான வார்த்தைகளால், பச்சைமையில் பெரிய எழுத்துக்களில் எழுதப் பட்டிருப்பதை இன்றும் பார்க்கலாம்...! மனிதன் பழக்க வழக்கங்களில் இன்னும் திருந்தவில்லை என்பதையே இந்த வாசகம் சுட்டிக் காட்டுகிறது. அந்த டொயிலட் அதிகாரியை என்னால் மறக்க முடியவில்லை. பெட்டா பஸ் ஸ்டேன்டில் அந்தக் கழிப்பறைக்குக் குறைந்தது 200 பேராவது ஆணும், பெண்ணுமாய் நுழைவார்கள். 5 ரூபாய் வீதம் 200 பேருக்கு ஒரு நாளைக்கு 1000 ம் ரூபாய். முப்பது நாளுக்கு 30,000ம் ரூபாய் வாழ நினைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் வாழலாம்...! வசதி, வாய்ப்-புக்கள், இப்படியெல்லாம் இருக்-கும் போது நான் 5 வருசமா 5,000ம் ரூபா சம்பளத்தில் எவன் எவனையெல்லாம் 'பொஸ்-ஸாக' அடி பணிந்து, கை நீட்டிக் கொண்டிருக்கிறேன்....?ச்சீ...!இ னிமே இந்த வயசுல ..... எந்த கக்கூஸில் போய் கதிரையைப் போட்டு உட்காருவது...? கட-லைத் தட்டைத் தூக்குவது..? ஸ்வீப் டிக்கட்... கிட்டார் பாட்டு...? எனக்கு பொஸ் நினைப்பு.. சனிக்கிழமையும் கடையைச் சாத்த மாட்டான்...! இன்னைக்கு வெள்ளிக் கிழமை ஒரு நாள் லீவ் எடுத்து விடிய நாலு மணிக்கு அட்டனிலிருந்து புறப்பட்டு 9 மணிக்கெல்லாம் கொழும்புக்கு வந்து சொந்த வேலையை முடிச்சிகிட்டு பகல் சாப்பாடும் இல்லாமல் இந்த மூனு மணி பஸ்ஸை பிடிக்க முடிஞ்சது. எப்படியும் 7 மணிக்-குள்ள அட்டன் போயிருவன். கரவனெல்ல சந்திக் கடையில் ஒரு பனிஸும். பிளேன் டீயும் வயிற்றுக்குள் நுழைந்தால்தான் பசிக்களைப்பு கொஞ்சம் ஆறும்.

வெக்கங்கெட்ட அந்த அஞ்சா-யிரத்துக்கு, உத்தியோகம்.... அதுக்கு பேரு... புருஷ லட்ச-ணம்..??



உன் பிறந்த நாளைப் பார்த்து
மற்ற நாட்கள்
புலம்பிக் கொண்டிருக்கின்றன...
பிறந்திருந்தால்
உன் பிறந்த நாளாய்
பிறந்திருக்க
வேண்டுமென்று...

தபு சங்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டும் ஐரோப்பியப் பெண்கள் சந்திப்பு

17 வருடங்களில் 26 முறை சந்தித்திருக்கிறார்கள். புலம் பெயர்ந்து ஐரோப்பாவில் வாழ்கின்ற பெண்ணியச் சிந்தனையாளர்களைப் பற்றித்தான் கூறுகின்றோம். "பெண் விடுதலை நோக்கிலான பெண்ணியச் சிந்தனை கருத்தாடல்களும் அனுபவப் பரிமாற்றங்களுக்கும் உரமேற்றும் ஒரு களம்" என்று அவர்கள் இதனைக் குறிப்பிடுகிறார்கள். இந்தக் களம் வருடாவருடம் ஐரோப்பாவின் ஒவ்வொரு நகரத்திலும் அரங்கேறி வருகின்றது.

2006ஆம் ஆண்டுக்கான பெண்கள் சந்திப்பு பாரீஸில் ஒக்டோபர் மாதம் 13ஆம் 14ஆம் தேதிகளில் நடந்தது. இதில் கிரமமாகக் கலந்து கொள்பவர்கள் பலர் நம்முடைய இணைய வாசகர்களுக்கெல்லாம் பரிச்சயமுள்ளவர்களான சுவிஸ் ரஞ்சி, ஜேர்மனி தேவா, லண்டனிலிருந்து ராஜேஸ் பாலசுப்பிரமணியம், நிர்மலா, பிரான்ஸ் விஜி, ஜெயா பத்மநாதன் ஆகியோர் உள்ளிட்ட பல பெயர்களை அடுக்கலாம். சுவிஸ் ரஞ்சியும் பிரான்ஸ் விஜியும் ஜேர்மன் தேவாவும் 'ஊடறு' என்ற இணைய சஞ்சிகையை நடத்துகின்றனர். இதைத் தவிர ஜெயாவும் வலைப் பதிவினை எழுதுகிறாராம். இராஜேஸும் நிர்மலாவும் இலக்கியத் தளத்திலும் எமக்குத் தெரிந்தவர்கள். இவர்களைத் தவிர அந்தந்த நாடுகளில் வசிக்கும் பத்துப் பதினைந்து பெண்களும் இந்தக் களங்களில் கலந்து கொள்ளுகின்றனர்.

இந்த முறை அவுஸ்திரேலியாவிலிருந்து ஆழியாளும் இந்தியாவிலிருந்து புதிய மாதவியும் கலந்து கொண்டார்கள். ஜேர்மனியில் புலம் பெயர்ந்து வாழ்கின்ற இலங்கையருடைய ஒன்றுகூடலுக்கு சென்றிருந்த அடியேனுக்கு வருகின்ற வழியில் இதிலும் கலந்து கொள்ள அழைப்பு வந்தது. பதினேழு வருடங்களாகத் தொடர்ந்து நடக்கும் சந்திப்பினைப் பார்க்கத் துறுதுறுத்தேன் நான். அங்கு போன பிறகுதான் ஆழியாளும் மாதவியும் அதே துறுதுறுப்பில்தான் தங்கள் செலவிலேயே அங்கு வந்திருப்பது தெரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது ஆரம்ப உரையிலேயே, பெண்கள் சந்திப்பு "பல்வேறு கருத்துக்களுக்கும் கொள்கைகளுக்கும் இடமளிக்கப்பட்டு, இதில் பங்குபெறும் ஒவ்வொருவரும் சுதந்திரமாக தம் எண்ணங்களை வெளியிட அமைந்த தளம்" என்று சுவிஸ் ரஞ்சி பிரகடனம் செய்தார். இவரது உரையைத் தொடர்ந்து குடும்ப வன்முறையைப் பற்றி தேவா பேசினார். ஊடறு சஞ்சிகை வெளியிட்ட 'இசை பிழியப்பட்ட வீணை' என்கின்ற மலையகப் பெண்களின் கவிதைத் தொகுப்பிற்கு ஆழியாள் கருத்துரை வழங்கினார். குடும்பங்களில் பெண்களுக்கு ஏற்படுகின்ற உறவுச் சிக்கல்கள் பற்றி புதிய மாதவி தனது சொந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் பேசினார். அடுத்து "புனிதம் என்கின்ற போர்வையில் பெண் தற்கொலைதாரிகள்" என்பது பற்றி இராஜேஸ்வரி அரசியல் பிரசங்கம் போன்ற உரையினை ஆற்றினார். அதற்குப் பின் "பெண் உடல் ரீதியாக மாற்றம் அடைந்தால் வரும் விளைவுகள்" என்று ஜெயாவும், "பெண்ணியச் சிந்தனைகளும் தமிழ்ப் பெண்களின் விடுதலையும்" என்ற தலைப்பில் நிர்மலாவும் பேசினார்கள். அவுஸ்திரேலியாவின் இரு பெண் கவிஞர்களின் படைப்புக்களை "சிவப்பு கட்டுமரங்களும் வெள்ளை சிலந்திகளும்" என்ற தலைப்பில் ஆழியாள் மதிப்பீடு செய்தது சுவாரசியமாக இருந்தது. இந்தப் பேச்சாளர்கள் தவிர கலந்துரையாடலில் கூட ஏனையோரின் பங்களிப்பு குறைவுதான்.

சரிதான், ஒரு சிறிய குழுப் பெண்கள் ஏதோ பிரயோசனமாக ஒவ்வொரு வருடமும் இரு நாட்களைக் கழிக்கின்றனர் என்று நீங்கள் நினைத்தால், அதுவும் அந்தப் பெண்களுக்குத் தெரிந்தால், அவர்கள் உங்களை அப்படியே விழுங்கி விடுவார்கள். அந்தளவுக்கு தாங்கள் ஏதோ சரித்திரப் பிரசித்திப் பெற்ற நடவடிக்கையில் ஈடுபடுவது போலவே அவர்களுடைய

பெண்கள் சந்திப்பின் மூலம், ஏதோ கூடிக் கதைக்கிறார்களேயொழிய எல்லோரும் இணைந்து பெண்கள் வாழ்க்கையில் ஏதேனும் ஒரு விதத்தில் மாற்றம் கொண்டு வந்ததாக இல்லை.

தோரணைகள் எல்லாமே இருந்தன. பெண்கள் சந்திப்பின் வரலாற்றைச் சிலர் திசை திருப்ப முயல்கிறார்கள் என்று தன்னுடைய முன்னுரையில் பீடிகை போட்டுச் சொன்னார் ரஞ்சி. ஆண்கள் எல்லோரும் ஏன் தங்களை மட்டும் பெண்கள் சந்திப்பின்போது புறக்கணிக்கின்றனர் என்று புகைந்து கொண்டிருப்பதாக இராஜேஸ் அடிக்கடி தெரிவித்தார். ஒவ்வொரு சந்திப்பினையும் ஆவணப்படுத்துவதாகவும் பெண்கள் சந்திப்பு மலர் ஒன்றை வெளியிட இருப்பதாகவும் சொன்னார்கள். இதற்கு, பெண்கள் சந்திப்பின் மூலம் ஏதோ கூடிக் கதைக்கிறார்களேயொழிய எல்லோரும் இணைந்து பெண்கள் வாழ்க்கையில் ஏதேனும் ஒரு விதத்தில் மாற்றம் கொண்டு வந்ததாக இல்லை.

மாற்றம் இல்லையா? ஆகா அப்படி நீங்கள் சொன்னால் இராஜேஸ் உங்களை தின்று தீர்த்து விடுவார். அவருடைய கூற்றுப்படி அவர் அனுப்பிய மின்னஞ்சல் கண்டுதான் வவுனியாவுக்கு அனுப்பப்பட்ட கொழும்புத் தமிழர் திரும்ப அனுப்பப்பட்டனர், யாழ் பல்கலைகழக விரிவுரையாளர் கணேசலிங்கம் கைது செய்யப்பட்டார், ஹசீனாவை சவுதி அரசாங்கம் விடுதலை செய்யப்போகிறது. மெய்யாலும் குண்டுச்சட்டியில் குதிரை ஓட்டுபவர்களை பாரீஸில்தான் நான் கண்டேன்.

கடந்த இருபது ஆண்டுகளாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடகிழக்குப் பெண்கள் மத்தியில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்ட எனது அனுபவங்களை நான் எனது உரையில் அவர்களுடன் பகிர்ந்து கொண்டபோதுதான் இந்தக் குதிரையோட்டத்தின் முழுப் பரிமாணமும் பிரசன்னமானது. என்னுடைய உரையில் புலிகளை விமர்சிக்காதது அங்குள்ள பிரபலங்களின் ஆத்திரத்தை அளவின்றிக் கிளறிவிட்டது.

என்னாயிற்று அடுத்த இதழ் வரைகாத்திருங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து

யாராவது பரிசுப் பொருட்கள் வைச்சுத் தந்த பெட்டியோ அல்லது புதிதாக பொருள் வாங்கிய பெட்டியைச் சுத்தி வந்த பேப்பர்.அலுமினியக் கடதாசி எல்லாத்தையும் எடுத்துப் பிறகு பாவிப்பதற்காக பத்திரமாக வைப்பார்கள்.

விமான நிலைய வாசலில் இரண்டு மிகப் பெரிய கூட்கேசுகளோட நின்று கொண்டிருப்பார்கள்.கையிலும் ஒன்று தனியாய்க் கிடக்கும்.

விருந்துக்குப் பிந்திப் போவதோட அதை வழமை என்றே நினைப்பார்கள்.

தன் பிள்ளைகளுக்கு ஒரே உச்சரிப்போடு (ரிதம்) கூடின மாதிரியான பெயர்களை வைப்பார்கள்.(உதாரணத்திற்கு சுரேஸ்.ரமேஸ்.தினேஸ்)

பிள்ளைகளினது உண்மையான பெயர்களுக்குச் சம்பந்தமில்லாமல் செல்லப் பெயர் ஒன்று வைத்துக் கூப்பிடுவார்கள்

வீட்டுக்கு வந்த விருந்தினர்கள் விடை பெறும்போது வாசலில் வைத்து மணித்தியாலக்கணக்காகக் கதைத்து கொண்டிருப்பார்கள்.

காரில் எவ்வளவு பேரை ஏற்ற முடியுமோ அவ்வளவு பேரை ஏற்றிச் செல்வார்கள்.

புதிதாக வாங்கிய பொருட்களை (ரிமோட் கன்றோல்.வி.சி.ஆர்.) பிளாஸ்டிக் கவரால் மூடிக் கவனமாக வைத்திருப்பார்கள்.

நாற்பது வயதானால் கூட தங்கள் பெற்றோருடனே கூடி வசிப்பார்கள்.பெற்றோரும் அதையே விரும்புவார்கள்.

முன்தோன்றியோரைப்புரிந்து கொள்ளல்...

யாருடைய மகள் யாருடைய மகனோட ஓடினது என்பதைத் தெரிஞ்சு கொள்ள விருப்பம் காட்டுவதோடு அதை மற்றவர்களுக்குப் பரப்புவதை தம் கடமையாக நினைப்பார்கள்.

தொலைதூர அழைப்புக்களை இரவு 9 மணிக்குப் பிறகே (Off peak) எடுப்பார்கள்.

பெற்றோருடன் வீட்டில் இல்லாமல் வேறு இடத்தில் வசித்தால், தொலைபேசியில் பெற்றோர் குறிப்பாகத் தாய் கதைக்கும் போது அது நடுச்சாமமாக இருந்தாலும் சாப்பிட்டியா எனக் கேட்க மறக்க மாட்டார்கள்.

நாட்டவர் ஒருவரை சந்தித்து சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தால் எந்த ஒரு வகையிலோஅவர்கள் தம் உறவினர் எனக் கண்டுபிடித்து விடுவார்கள்.

வெளிநாட்டில் உள்ளவர்களோடு தொலைபேசியில் பேசும் போது பெற்றோர்கள் எவ்வளவு முடியுமோ அவ்வளவு கத்திக் கதைப்பார்கள்.(தொலைத் தொடர்பு தொழில் நுட்பத்தில வலுத்த சந்தேகம்)

புதிய கதிரைகளில் அழுக்குபடாமல் இருப்பதற்கு பெட்சீட் போட்டு வைத்திருப்பார்கள்..அதே நேரம் அவர்களது பெட்ல இருக்கிற சீட்ல (ஷீட்) தண்ணீர் பட்டு மாதக்கணக்காக இருக்கும்.

திருமணப் பேச்சின் போது தங்கள் பெண் உண்மையாக எப்படி இருந்தாலும் மெல்லிய அழகான பெண் என்றே சொல்லுவார்கள்.

இன்னும் கிடக்கு சொன்னா கோவிப்பியள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இடமிருந்து வலம்

1. அரசியல்
4 விடை
5.அயல்(குழம்பி)
6.தந்தை
7.ரசனை
10.அடர்த்தி
11.கலகம்
13.ஆம்(வலமிருந்து இடமாக)
14.மாடு
17.ஏக்கம்

குறுக் கெழுத்துப் போட்டி 5 இன் விடைகள்

மேலிருந்து கீழ்

1.அந்தரங்கம்
2.சிந்தனை
3.தையல் (தலைகீழாக)
4.கல்வி (கீழிருந்து மேலாக)
8.தீர்வு
9.பதிவு
10.அம்மா
12.ஆழம்(குழம்பி)
15.ஏடு(தலைகீழாக)
16.கலை(தலைகீழாக)

குறுக்கெழுத்துப் போட்டி 6

இடமிருந்து வலம்

1 வல்லமைகள் செய்வது அல்லது விரும்பாத மேலாண்மை
5 நாடுகளில் மூன்றிருக்கிறது, தமிழ் மன்னரிடம் அன்று ஐந்திருந்ததாம், ஆனால் எதுவும் பறக்கவில்லை.
7 அளவைக் குறிப்பது குழம்பியிருக்கிறது
8 குழம்பியிருக்கும் இது ஊதினால் வெடிப்பது
9 தும்பிக்கையை நம்பிக்கையாய் கொண்டது
10 இடம் மாறினாலும் இல்லாமையாலும் எழுவது (வலமிருந்து இடமாக)
12 தேவை வேண்டி ஆட்டும் நாய்களிடம் இருப்பது
13 மாமிசம்
14 குழம்பியிருக்கும் எமது இருப்பு
15 செல்வம் யுரிய இடத்தில் இருப்பதில்லை என்பதால் குழ்ம்பியுள்ளது
16 ஆண்டவன் அல்லது தொடக்கம்
18 சின்னத்திரையில் தடை செய்யப் பட்டிருப்பது
19 தன்னிலை தாழாதவனும் தாழ்ந்தால் உயிர் வாழாதவனிடமும் மட்டுமே இருப்பது.(வலமிருந்து இடமாக)

மேலிருந்து கீழ்

1 தொடக்கமும் முடிவும் தெரியாதிருப்பது
2 முதலாளி மனம்
3 குழம்பியிருக்கும் இது சிறியதோர் குன்று அல்லது திடர்
4 பசுமை நிறைந்த நினைவிடம்
6 இடிக்குப் பிந்தியது கண்ணுக்கு முந்தியது
9 சமாதானத்துக்காக திறந்தே கிடக்கிறதாம்!
10 வாய் விட்டுச் சிரிக்கத் தெரியாதவர்கள் செய்வது
11 முடிவே இல்லாமல் அரசியலில் நடப்பது
17 மூடித் திறப்பது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இருப்பா இழப்பா

தொப்பி பொருத்தமானவர்களுக்கு



உள்ளூர்க் காதல்

பிள்ளை வளர்ப்பைப் பார்த்தியளே!
வளவுக்கை வரக் கூடாது
கொலைதான் விழும்
எந்தக் கேடயங்களும்
இந்த அம்புகளிடம் இருந்து
தப்ப முடியாது
எந்தக் கவச வாகனமும்
இந்தக் கண்ணி வெடிகளிடமிருந்து
தப்ப முடியாது

வயதுக் கோளாறு என்பது
வயது போனவர்களின் வாதம்!
வயதுக்கு வந்து விட்டோம் என்பது
எதிர்க் கட்சியின் பிரதிவாதம்!!

சட்டமன்ற வாக்களிப்பில்
வென்றது எம் ஆளும் கட்சிதான்
அதுதான் அறுபதுகளின் கட்சி.

காதலுக்கு சாட்சிக்
கையெழுத்துப் போட
பாங் பலன்சும்,
உறுதியின் நீள அகலமும்
எம் அப்புகாத்துமார்களால்
பரிசீலிக்கப் பட்டது

முப்பாட்டன் வழி செம்புகளில்
எவரெவர் வாய்கள் பட்டது என
கொய்யகச் சேலைகளினால்
துலக்கிப் பார்க்கப் பட்டது

செவ்வாயின் தோஷத்தையும்
சனியின் பார்வையையும்
சரிபார்த்துக் கொண்டார்
சகவீட்டுச் சாத்திரியார்

வேலையில் இருந்தாலும்
வெட்டுக் கொத்து பென்சன் பற்றி
கொழும்புக் கச்சேரிவரை
பைல்கள் தட்டிப் பார்க்கப் பட்டன

அனைத்தும் கூடியவர்களுக்கு
அறுகரிசி போடப்பட்டது
மற்றவர்களுக்கோ
வாய்க்கரிசி போடக்கூட
அனுமதி மறுக்கப் பட்டது

எந்தச் சங்காரத்தாலும்
சமூக அமைப்பின்
ஓர் சல்லிவேரைக்கூட
அசைக்க முடியவில்லை

இக் கந்தோரில் தம் தரத்தை
உயர்த்திக் கொண்டவை
இரண்டு மனங்கள் அல்ல!
இரண்டு குடும்பங்களே

நன்றி

மின்னஞ்சல் தோழிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ONE STOP STUDIO FOR ALL YOUR REQUIREMENTS

Saara Media House

#3 Torrington Avenue, Colombo-07 , Sri Lanka. Tel : 0094 602150836 , Mob : 0094 773933744 , Fax : 0094 112585190
e.mail : saaramedia@yahoo.com

Printed by : Sellaam Press, 110, Negambo Road, Paliyagoda. Tel: 294 9198

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org